IDFC FIRST Bank

ALWAYS YOU FIRST

# IDFC ஃபர்ஸ்ட் பேங்க் கிரெடிட் கார்ட்ஸ்

## மிக முக்கியமான விதிகளும் நிபந்தனைகளும் (எம்ஐடிசி)

அனைத்து கிரெடிட் கார்ட் உறுப்பினர்கள்/ கிரெடிட் கார்ட் விண்ணப்பதாரர்கள்/ வங்கியின் பணியாளர்கள் / வாடிக்கையாளர்கள்/ வங்கியின் இந்த கிரெடிட் கார்ட் திட்டத்திற்கு விருப்பம் தெரிவிக்கும் பொது மக்கள் அனைவருக்கும் இதில் கீழேயுள்ள அனைத்து முக்கியமான விதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் அனைத்து தகவல்களும் உடனடியாக பொருந்தும். MITC -க்கள் மாற்றத்திற்கு உட்பட்டவை. (MITC) www.idfcfirstbank.com -இல் கொடுக்கப்பட்டுள்ள IDFC ஃபர்ஸ்ட் பேங்க் கிரெடிட் கார்ட் உறுப்பினர் விதிகள் மற்றும் நிபந்தனைகள்/ ஒப்பந்தங்கள் ஆகியவற்றோடு இணைத்து இந்த மிக முக்கியமான விதிகள் மற்றும் நிபந்தனைகள் வாசிக்கப்பட வேண்டும்.

## கட்டணங்களின் அட்டவணை: IDFC ஃபர்ஸ்ட் பேங்க் கிரெடிட் கார்ட்ஸ்

ஏப்ரல் 5,2022 முதல் அமலில்

### 1. சேர்க்கைக் கட்டணம், வருடாந்திர சந்தாக் கட்டணம் மற்றும் ஆட்- ஆன் கார்ட் கட்டணங்கள்.

| IDFC ஃபர்ஸ்ட் பேங்க் கார்ட் வகை | தொடக்க/சேர்க்கைக் கட்டணம் (₹) | வருடாந்திரக் கட்டணம் (₹) | ஆட்- ஆன் கார்ட் கட்டணங்கள். (₹) |
|---|---|---|---|
| ஃபர்ஸ்ட் மில்லினிய கிரெடிட் கார்ட்<br>ஃபர்ஸ்ட் கிளாசிக் கிரெடிட் கார்ட்<br>ஃபர்ஸ்ட் செலக்ட் கிரெடிட் கார்ட்<br>ஃபர்ஸ்ட் வெல்த் கிரெடிட் கார்ட்<br>எம்ப்ளாயீ கிரெடிட் கார்ட்<br>ஃபர்ஸ்ட் WOW கிரெடிட் கார்ட் | இல்லை | இல்லை | இல்லை |
| தனிப்பயனாக்கப்பட்ட உருவப்படம் - கட்டணம்* | ₹499 | இல்லை | ₹499 |
| ஃபர்ஸ்ட் பிரைவேட் கிரெடிட் கார்ட் | ₹50,000 | ₹50,000 | 1 ஆவது ஆட் ஆன் - இல்லை 2 ஆவது ஆட் ஆன் தொடங்கி ஒவ்வொரு ஆட் ஆனுக்கும் ₹ 4,000 |

*தனிப்பயனாக்கப்பட்ட உருவப்பட அம்சம் ஃபர்ஸ்ட் பிரைவேட் -க்குப் பொருந்தாது

### 2. நிதிக் கட்டணங்கள்*:

| IDFC ஃபர்ஸ்ட் பேங்க் கார்ட் வகை | கொள்முதல்கள், ரொக்க முன் தொகைகள், மற்றும் செலுத்தப்படவேண்டிய நிலுவைத் தொகைகள் மீதான வட்டி விகிதம் (செலுத்தப்பட்ட தொகை குறைந்தபட்ச நிலுவைத் தொகை மற்றும் மொத்த நிலுவைத் தொகை ஆகியவற்றுக்கிடையிலான மதிப்பில் இருந்தால் கட்டணம் விதிக்கப்படும்) | காலம் கடந்து தொகை செலுத்தலுக்கான வட்டி (தவணைத் தேதிக்குள் குறைந்தபட்ச நிலுவைத் தொகை (MAD) செலுத்தப்படாவிட்டால் விதிக்கப்படும் வட்டி) |
|---|---|---|
| ஃபர்ஸ்ட் மில்லினிய கிரெடிட் கார்ட்<br>ஃபர்ஸ்ட் கிளாசிக் கிரெடிட் கார்ட்<br>ஃபர்ஸ்ட் செலக்ட் கிரெடிட் கார்ட்<br>ஃபர்ஸ்ட் வெல்த் கிரெடிட் கார்ட்<br>எம்ப்ளாயீ கிரெடிட் கார்ட்<br>ஃபர்ஸ்ட் WOW! கிரெடிட் கார்ட் | மாதாந்திர விகிதம் - 0.75% -3.5%<br>வருடாந்திர விகிதம் 9% -42% | மாதாந்திர விகிதம் - 3.99%<br>வருடாந்திர விகிதம் - 47.88% |
| ஃபர்ஸ்ட் பிரைவேட் கிரெடிட் கார்ட் | மாதாந்திர விகிதம் - 0.75%<br>வருடாந்திர விகிதம் 9% | மாதாந்திர விகிதம் - 3.99%<br>வருடாந்திர விகிதம் - 47.88% |

### 3. இதர சந்தாத் தொகைகள் மற்றும் கட்டணங்கள்

| | |
|---|---|
| முன் தொகை - பரிமாற்றத்திற்கான சந்தாத் தொகை ** | ₹250 |

| | |
|---|---|
| காலம் கடந்த தொகை செலுத்தல் கட்டணங்கள் | ஃபர்ஸ்ட் மில்லினிய கிரெடிட் கார்ட், ஃபர்ஸ்ட் கிளாசிக் கிரெடிட் கார்ட், ஃபர்ஸ்ட் செலக்ட் கிரெடிட் கார்ட், எம்ப்ளாயீ கிரெடிட் கார்ட், ஃபர்ஸ்ட் WOW! கிரெடிட் கார்ட், ஃபர்ஸ்ட் வெல்த் கிரெடிட் கார்ட் - மொத்த நிலுவைத் தொகையில் 15% (குறைந்த பட்சம் ₹ 100 மற்றும் அதிகபட்சமாக ₹ 1250 என்பதற்கு உட்பட்டு) ஃபர்ஸ்ட் பிரைவேட் கிரெடிட் கார்ட் - இல்லை |
| கடன் வரம்பிற்கு மீறிய தொகை கட்டணங்கள் | கடன் வரம்பிற்கு மீறிய தொகையில் 2.5% (குறைந்த பட்ச கட்டணமாக ₹ 500 -க்கு உட்பட்டு) பிரைவேட் கிரெடிட் கார்ட்டுக்கு - இல்லை, ஃபர்ஸ்ட் WOW! கிரெடிட் கார்ட்டுக்குப் பொருந்தாது. |
| காசோலை நிராகரிப்பு/ ஆட்டோ டெபிட், தொகை செலுத்தல் திரும்பப் பெறப்படுதல் | காசோலை நிராகரிப்பு / ஆட்டோ டெபிட், தொகை செலுத்தல் திரும்பப் பெறப்படுதல் ஆகியவற்றின் ஒவ்வொரு முறைக்கும் ₹ 250/- |
| ரிவார்ட் ரிடம்ப்ஷன் கட்டணம் | இல்லை (அக்டோபர் 1, 2022 முதல் ஒவ்வொரு ரிடம்ப்ஷன் பரிமாற்றத்திற்கும் ₹ 99 விதிக்கப்படும்) |
| கிளைகளில் ரொக்கத் தொகை செலுத்துவதற்கான கட்டணம் | இல்லை |
| வெளியூர் காசோலைகள் செயல்முறைக் கட்டணம் | இல்லை |
| கணக்கு அறிக்கை நகல் விண்ணப்பம் | இல்லை |
| புதிய கார்ட் மாற்றித் தருவதற்கான கட்டணம் | ஃபர்ஸ்ட் மில்லினிய கிரெடிட் கார்ட், ஃபர்ஸ்ட் கிளாசிக் கிரெடிட் கார்ட், ஃபர்ஸ்ட் செலக்ட் கிரெடிட் கார்ட், எம்ப்ளாயீ கிரெடிட் கார்ட், ஃபர்ஸ்ட் WOW! கிரெடிட் கார்ட், ஃபர்ஸ்ட் வெல்த் கிரெடிட் கார்ட்,- ₹ 100 தனிப்பயனாக்கப்பட்ட உருவப்பட கார்ட்களுக்கு ₹ 149 பொருந்தும். ஃபர்ஸ்ட் பிரைவேட் கிரெடிட் கார்ட் - ₹ 4000 |
| செக்/ரொக்கத் தொகை செயலாக்க கட்டணம் | இல்லை |
| கட்டணச்சீட்டு கோரிக்கை | இல்லை |
| வெளிநாட்டு பணப் பரிமாற்றங்களுக்கான மார்க் அப் கட்டணங்கள் | ஃபர்ஸ்ட் மில்லினிய கிரெடிட் கார்ட், ஃபர்ஸ்ட் கிளாசிக் கிரெடிட் கார்ட்,- 3.5%<br>ஃபர்ஸ்ட் செலக்ட் கிரெடிட் கார்ட், எம்ப்ளாயீ கிரெடிட் கார்ட்,- 1.99%<br>ஃபர்ஸ்ட் வெல்த் கிரெடிட் கார்ட்,- 1.5%<br>ஃபர்ஸ்ட் WOW! கிரெடிட் கார்ட், ஃபர்ஸ்ட் பிரைவேட் கிரெடிட் கார்ட் - இல்லை |
| EMI கட்டணங்கள் | பரிமாற்ற தொகை மதிப்பில் 1% (குறைந்த பட்சம் ₹ 99) |
| எரிபொருள் உபரி வரி விலக்கு^ | ஃபர்ஸ்ட் மில்லினிய கிரெடிட் கார்ட், ஃபர்ஸ்ட் கிளாசிக் கிரெடிட் கார்ட் ஃபர்ஸ்ட் WOW! கிரெடிட் கார்ட் ஆகியவற்றின் சுழற்சி முறையிலான கணக்கு அறிக்கை ஒவ்வொன்றிற்கும் பரிமாற்ற தொகை உபரி வரி மதிப்பில் 1% அதிகபட்சமாக ₹ 200/- வரை விலக்கு ஃபர்ஸ்ட் செலக்ட் கிரெடிட் கார்ட், எம்ப்ளாயீ கிரெடிட் கார்ட் ஆகியவற்றின் சுழற்சி முறையிலான கணக்கு அறிக்கை ஒவ்வொன்றிற்கும் ₹ 300/- வரை விலக்கு ஃபர்ஸ்ட் வெல்த் கிரெடிட் கார்ட், ஃபர்ஸ்ட் பிரைவேட் கிரெடிட் கார்ட் ஆகியவற்றின் சுழற்சி முறையிலான கணக்கு அறிக்கை ஒவ்வொன்றிற்கும் ₹ 400/- வரை விலக்கு |
| சரக்கு மற்றும் சேவை வரி (GST) | அனைத்து செலுத்துத் தொகைகள், வட்டி தொகைகள் மற்றும் இதர கட்டணங்களுக்கு தற்சமயம் 18% இந்திய அரசு அறிவிப்பின் படி விதிக்கப்படுகிறது மற்றும் இது மாறுதலுக்கு உட்பட்டது |

*ஒரு கார்ட் உறுப்பினருக்கு பொருந்தும் இந்த நிதி(வட்டி) விகிதங்கள் வங்கியின் உள்ளக கொள்கைப் பண்பளவுகளின் அடிப்படையில் இருக்கும். இவை இறுதியானது மற்றும் கட்டுப்படுத்துவது மற்றும் வங்கியின் சொந்த விருப்பத்தின் பேரில் மாறுதலுக்கு உள்ளாகக் கூடியது.

**வழங்கப்படும் சேவைகளுக்காக ஒரு வங்கி அல்லது சேவை வழங்குநர் விதிக்கும் எந்த ஒரு பன்னாட்டுப் பண மதிப்புத் தொகைகள் அல்லது கட்டணங்கள் உட்பட எந்த ஒரு கட்டணச்சீட்டும், இந்தியப் பண மதிப்புக்கு DCC வழியாக மாற்றப்பட்ட பிறகான இந்திய ரூபாய் மதிப்பு, குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்றால் டைனமிக் கரன்சி கன்வர்ஷன் மூலமாக (அதாவது சில பன்னாட்டு வர்த்தக மையங்கள்/ ஏ.டி.எம் -களால் வழங்கப்படும் ஒரு சேவையாகும் இது அயல்நாட்டு பணத்தின் மூலமாக மேற்கொள்ளப்படும் ஒரு பரிமாற்றத்தின் போது அந்தப் பணத்தை எடுக்கும் போது/ விற்பனையின் போது தொகை செலுத்துகையில், அந்தப் பணத்தை உள்ளூர் பணமதிப்புக்கு, அதாவது இந்திய ரூபாய் பணமதிப்புக்கு மாற்றிக்கொள்ளும் வசதியை ஒரு கார்ட் உறுப்பினருக்கு வழங்குகிறது)

^எரிபொருள் பரிமாற்ற உபரி வரி வசூலிப்பவரால் (வர்த்தகரின் வங்கி வழங்கும் டெர்மினல் / பேமெண்ட் கேட்வே வசதி) விதிக்கப்படுகிறது, எரிபொருள் உபரி வரி விலக்கலுக்கு தகுதி பெறும் எரிபொருள் பரிவர்த்தனையின் உட்சபட்ச தொகை 1% ஆக வரையறுக்கப்பட்டிருக்கிறது. எரிபொருள் உபரிவரியின் மீதான GST -க்கு விலக்கு கிடையாது கட்டணச்சீட்டிலுள்ள தொகையின் மதிப்பு கிரெடிட் கார்ட் கணக்கு அறிக்கையில் காணப்படுவதற்கு மாறாக இருக்கக் கூடும், ஏனென்றால், GST போன்ற உபரி வரிகள் பரிமாற்றத்திற்கு பிறகு வசூலிக்கும் வங்கியால் விதிக்கப்படுகிறது. தகுதியான பரிவர்த்தனைகளுக்கான 1% உபரி வரி விலக்கு (GST தவிர்த்து) விவரம் மாதாந்திர கிரெடிட் கார்ட் அறிக்கையில் தனியாக காட்டப்பட்டிருக்கும்.

## 1. செலுத்துத் தொகைகள் மற்றும் கட்டணங்கள்

### i. வருடாந்திர மற்றும் புதுப்பித்தல் உறுப்பினர் கட்டணம்.

ஃபர்ஸ்ட் பிரைவேட் கிரெடிட் கார்ட் தவிர்த்து, அனைத்து வகை கார்ட்களுக்கும் எந்த ஒரு வருடாந்திர மற்றும் புதுப்பித்தல் உறுப்பினர் கட்டணங்களும் இல்லை. ஃபர்ஸ்ட் பிரைவேட் கிரெடிட் கார்ட்க்கு பொருந்தும் கட்டணங்கள் குறித்து கார்ட் வழங்கும் சமயத்தில் கார்ட் உறுப்பினருக்கு தெரியப்படுத்தப்படும். ஃபர்ஸ்ட் பிரைவேட் ஆட்-ஆன் கிரெடிட் கார்ட் -முதல் ஆட்-ஆன் கார்ட் இலவசமாக வழங்கப்படும் இரண்டாம் ஆட்-ஆன் முதல் ஒவ்வொரு ஆட்-ஆன் -க்கும் ₹4000 கட்டணமாக வசூலிக்கப்படும்.

### ii. ரொக்க முன்பணத் தொகை கட்டணம்

கார்ட் உறுப்பினர் அவசரகாலத் தேவைகளுக்காக இந்தியாவில் அல்லது அயல்நாடுகளிலுள்ள ஏ.டி.எம் -இல் பணம் வித்ட்ரா செய்ய கார்டை பயன்படுத்தலாம். கட்டண அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி பரிவர்த்தனைக் கட்டணமாக ₹ 250 விதிக்கப்படும் மற்றும் அதற்கான கட்டணம் கார்ட் உறுப்பினரின் அடுத்த கணக்கு அறிக்கையில் வசூலிக்கப்படும். IDFC ஃபர்ஸ்ட் பேங்க் -இன் தனிப்பட்ட விருப்பத்திற்கிணங்க கார்ட் உறுப்பினருக்கு ஓர் முன்அறிவிப்பை அளித்து மற்றும் வங்கியின் வலைத்தளத்தில் பிரசுரிக்கப்படும் கட்டண அட்டவணையில் வெளியிடுவதன் மூலம் இந்த பரிவர்த்தனைக் கட்டணம் அவ்வப்போது மாற்றத்திற்கு உட்படுத்தப்படக் கூடியது

### iii. செலுத்துத் தொகையை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான கட்டணம்

குறிப்பிட்ட தவணை நாளுக்குள் கார்டின் குறைந்தபட்ச தவணைத் தொகை செலுத்தப்படாமல் இருந்தால் காலம் தாழ்த்தி செலுத்தப்படும் தொகைக்கான கட்டணம் (LPC) விதிக்கப்படும். காலம் தாழ்த்தி செலுத்தப்படும் தொகைக்கான கட்டணங்கள் (LPC) கார்டில் செலுத்தப்படாமல் இருக்கும் மொத்த நிலுவைத் தொகை யின் அடிப்படையில் இருக்கும். காலம் தாழ்த்தி செலுத்தப்படும் தொகைக்கான கட்டண விதிப்பை (LPC) தவிர்ப்பதற்கு குறிப்பிட்ட தவணை நாளில் அல்லது அதற்கு முன்பாக IDFC ஃபர்ஸ்ட் பேங்க் கார்ட் கணக்கில் தவணைத் தொகை முழுவதுமாக செலுத்தப்பட வேண்டும். தற்போது தவணை நிலுவைத் தொகையின் மீதான LPC 15% ஆக குறைந்தபட்சமாக ₹ 100 மற்றும் அதிகபட்சமாக ₹1250 ஆகவும் இருக்கிறது. இந்த கட்டணங்கள் IDFC ஃபர்ஸ்ட் பேங்க் -இன் தனிப்பட்ட விருப்பத்திற்கிணங்க கார்ட் உறுப்பினருக்கு ஓர் முன் அறிவிப்பை அளித்து மற்றும் வங்கியின் வலைத்தளத்தில் பிரசுரிக்கப்படும் கட்டண அட்டவணையில் வெளியிடுவதன் மூலம் அவ்வப்போது மாற்றத்திற்கு உட்படுத்தப்படக் கூடியது

<u>தவணைத் தொகையை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான கட்டணங்கள் ஒரு விளக்கப்பட உதாரணம்:</u>

| மொத்த நிலுவைத் தொகை | காலம் தாழ்த்தி செலுத்தியதற்கான கட்டணங்கள் |
|---|---|
| ₹100 -க்கும் குறைவு | கட்டணம் இல்லை |
| ₹500 | ₹100 |
| ₹5000 | ₹750 |
| ₹8000 | ₹1200 |
| ₹10000 | ₹1250 |
| ₹10000 -க்கும் அதிகம் | ₹1250 |

ஃபர்ஸ்ட் பிரைவேட் கிரெடிட் கார்டுக்கு LPG கிடையாது

### iv. நிதிக் கட்டணங்கள் ( வட்டி கட்டணங்கள்)

அ) கார்ட் உறுப்பினர் செலுத்த வேண்டிய முந்தைய நிலுவைத் தொகை ஏதாவது இருந்தால் அல்லது செலுத்த வேண்டிய தேதிக்குள் மொத்த நிலுவைத் தொகையும் செலுத்தப்படாது இருந்தால் நிதி (வட்டி) கட்டணங்கள் விதிக்கப்படும். கார்ட் உறுப்பினர் நிலுவைத் தொகையை முழுமையாக செலுத்தாமல் இருந்தால் அந்தத் தொகை முழுவதுமாக திருப்பிச் செலுத்தி முடிக்கும் வரை மேற்கொள்ளப்படும் அனைத்து பரிவர்த்தனைகளின் மீதான (ரொக்க முன் தொகை உட்பட) வட்டி கட்டணங்கள் மாதாந்திர சதவீத அடிப்படையில் செலுத்தப்பட வேண்டும். செலுத்தப்பட வேண்டிய நிதிக் கட்டணங்கள் ஏதாவது நிலுவையில் இருந்தால், செலுத்தப்பட வேண்டிய கார்ட் நிலுவைத் தொகை முழுமையாகச் செலுத்தி முடிக்கும் வரை கார்ட் உறுப்பினரின் கணக்கில் அந்தத் தொகை பற்று வைக்கப்படும். கார்ட் உறுப்பினருக்கு விதிக்கப்படும் வட்டி கட்டணம் தினசரி கூடுதலாக சேரும் அடிப்படையில் இருக்கும். முந்தைய கட்டணச்சீட்டுத் தொகையை தவணை நாளில் அல்லது அதற்கு முன்பாக முழுமையாக செலுத்தத் தவறினால், அந்த முந்தைய பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்ட தினத்திலிருந்து அந்தத் தொகை திருப்பிச்செலுத்தி முடிக்கப்படும் வரை வட்டி கட்டணம் விதிக்கப்படும்.

ஆ) கார்ட் உறுப்பினர் எந்த ஒரு நிலுவைத் தொகை இருப்பையும் முன்னெடுத்துச் சென்றால், அவ்வாறு முன்னெடுத்துச் செல்லும் இருப்புத் தொகை மற்றும் புதிய கட்டணச் சீட்டுகளின் மீதான நிதிக் கட்டணங்கள் அன்றாட இருப்புத் தொகை முறையில் கணக்கிடப்படும். முந்தைய நிலுவைத் தொகை முழுமையாகச் செலுத்தி முடிக்கப்படும் நாள் வரை அத்தகைய நிதிக் கட்டணங்கள் விதிக்கப்படும்

இ) நிதி (வட்டி) விகிதங்கள், பின்வரும் காரணிகளின் அடிப்படையில் ஆனால் அதுமட்டுமே அல்லாது மற்றவற்றையும் உள்ளடக்கி இருக்கும் அதாவது, கார்ட் உறுப்பினரின் கடன் வரலாறு, கொள்முதல் வழி வகைகள், திருப்பிச்செலுத்தும் நடத்தைகள், பயன்பாட்டு வழிவகைகள், நேர்மை, வங்கியின் சம்பிரதாய உள்ளக கொள்கை கூரளவுகள் ஆகியவற்றைப் பொறுத்து அமையும். நிதி(வட்டி) விகிதங்கள், மாதத்திற்கு 3.99% வரை (வருடத்திற்கு 47.88% என்ற அளவில்) உயரக்கூடும் அல்லது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் -இன் தனிப்பட்ட சொந்த விருப்பத்தின் அடிப்படையில் மாதத்திற்கு 075% (வருடத்திற்கு 9.00%) என்ற அளவில் மாற்றமடைய / குறையக்கூடும் மற்றும் அதுவே இறுதியானதும் மற்றும் கார்ட் உறுப்பினரைக் கட்டுப்படுத்துவதுமாகும்.

ஈ) கார்ட் உறுப்பினர் IDFC ஃபர்ஸ்ட் பேங்க் கிரெடிட் கார்டின் சுழற்சியின் அடிப்படையிலான கடன்வசதியைப் பயன்படுத்தினால் மற்றும் அதன் காரணமாக மாதாந்திர கட்டணச்சீட்டு அறிக்கையில் குறிப்பிடப்படும் தவணை தொகைக்கும் குறைவான தொகையை செலுத்த முடிவு செய்தாரென்றால், மொத்த நிலுவைத் தொகைக்கும் நிதிக் கட்டணங்கள் விதிக்கப்படும் மற்றும் ரொக்க முன் தொகை உட்பட புதிய பரிவர்த்தனைகள் அனைத்திற்கும் நிதிக் கட்டணங்கள் விதிக்கப்படும் அது முன்பு நிலுவையிலுள்ள முழுத் தொகையும் செலுத்தி முடிக்கும் காலம் வரை விதிக்கப்படும். முந்தைய கணக்கு அறிக்கையில் புதிய கொள்முதல்கள்/ ரொக்கத் தொகை பெற்றது ஆகியவற்றை சேர்த்து இருப்புத் தொகையாக காட்டப்பட்ட தொகையோடு, கிரெடிட் கார்டில் பெற்ற எந்த ஒரு கடன் மீதும் கட்டணச்சீட்டு அளிக்கப்பட்ட EMI தொகைகள் உட்பட அந்த நிலுவைத் தொகை முழுவதும் செலுத்தி முடிக்கப்படும் வரையிலான காலத்திற்கு வட்டி சேரும் என்பதை தயவுசெய்து கருத்தில் கொள்ளுங்கள்,

உ) இதர கிரெடிட் கார்ட் கணக்குகளில் இருந்து இருப்புத் தொகை மாற்றப்படும் சந்தர்ப்பங்களில் பேங்கர்ஸ் செக்/NEFT வழங்கப்பட்ட தேதியில் இருந்து அவ்வாறு மாற்றப்பட்ட தொகை மீதும் மற்றும் உங்கள் கார்ட் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட எந்த ஒரு கொள்முதல் தொகைகள் மீதும் நிதிக் கட்டணங்கள் உடனடியாக சேரத் தொடங்கும்

ஊ) கார்ட் கணக்கு முடிக்கப்பட்டதற்குப் பிறகும், கார்டில் உள்ள நிலுவைத் தொகை முழுமையாக செலுத்தி முடிக்கப்படும் வரை மேலே குறிப்பிட்ட நிதிக் கட்டணங்கள் தொடரும்.

வட்டி மற்றும் கட்டணங்கள் கணக்கீடு குறித்த விளக்கப்பட உதாரணம்

**விளக்கப்படம் 1**

தவணைத் தேதியில் குறைந்தபட்ச தவணைத் தொகையை முழுமையாக செலுத்தத் தவறினால் அதன் மீது விதிக்கப்படும் பல்வேறு கட்டணங்கள் கணக்கிடப்படும் முறை குறித்து பின்வரும் விளக்கப்படம் விளக்குகிறது. கார்ட் உறுப்பினர் முந்தைய அனைத்து நிலுவைத் தொகைகளையும் முழுமையாக செலுத்தி விட்டார் மற்றும் அவரது கார்ட் கணக்கில் வேறு எந்த ஒரு நிலுவைத் தொகையும் இல்லை என்று கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையின் தேதி நவம்பர் 24 ஆம் தேதி மற்றும் தவணை செலுத்துத் தேதி டிசம்பர் 12 ஆக இருக்கிறது. கார்ட் கணக்கில் மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைகளின் பட்டியல் பின் வருமாறு:

| தேதி | பரிவர்த்தனை | தொகை | இருப்புத் தொகை |
|---|---|---|---|
| நவம்பர் 10 | ஆடை கொள்முதல் | ₹15000 | ₹15000 |
| நவம்பர் 15 | ஏ.டி.எம் -இல் பணம் வித்ட்ரா செய்தல் | ₹5000 | ₹20000 |
| நவம்பர் 15 | ரொக்க முன் தொகை கட்டணம் (வரிகள் உட்பட) | ₹295 | ₹20295 |
| நவம்பர் 18 | பலசரக்கு கொள்முதல் | ₹6000 | ₹26295 |
| நவம்பர் 24 | கணக்கு அறிக்கை நாள் | மொத்த நிலுவைத் தொகை<br>குறைந்தபட்ச தவணைத் தொகை | ₹26295<br>₹1595 |
| டிசம்பர் 12 | | தவணை நாள் | |
| டிசம்பர் 13 | காலம் தாழ்த்தி செலுத்தப்பட்ட தவணை கட்டணங்கள் (வரிகள் உட்பட) | ₹1475 | ₹27770 |
| டிசம்பர் 18 | கார்ட் கணக்கில் செலுத்தப்பட்ட தொகை | ₹2000 (வரவு) | ₹25770 |
| டிசம்பர் 20 | மின் கட்டணம் செலுத்தப்பட்ட தொகை | ₹1000 | ₹26770 |
| டிசம்பர் 22 | கார்ட் கணக்கில் செலுத்தப்பட்ட தொகை | ₹18000 (வரவு) | ₹8770 |

டிசம்பர் 24 ஆம் தேதி வரை (அதாவது அடுத்த கணக்கு அறிக்கை நாள்) மேற்கொண்டு எந்த ஒரு தொகையும் செலுத்தப்படவில்லை. வருடத்திற்கு 47.88% என்ற தவணை தவறிய வட்டி விகிதத்தின் அடிப்படையில் கார்ட் மீதான வட்டி தொகை மற்றும் கட்டணங்கள் பின்வருமாறு விதிக்கப்படும்.

அ) வட்டி கட்டணங்கள்

| இருப்புத் தொகை | தொடக்க தேதி | முடிவு தேதி | மொத்த நாட்கள் | வட்டி கட்டணம் |
|---|---|---|---|---|
| ₹15000 | நவம்பர் 10 | நவம்பர் 14 | 5 | ₹98.38 |
| ₹20295 | நவம்பர் 15 | நவம்பர் 17 | 3 | ₹79.87 |
| ₹26295 | நவம்பர் 18 | டிசம்பர் 12 | 25 | ₹862.33 |
| ₹27770 | டிசம்பர் 13 | டிசம்பர் 17 | 5 | ₹182.14 |
| ₹25770 | டிசம்பர் 18 | டிசம்பர் 19 | 2 | ₹67.61 |
| ₹26770 | டிசம்பர் 20 | டிசம்பர் 21 | 2 | ₹70.23 |
| ₹8770 | டிசம்பர் 22 | டிசம்பர் 24 | 3 | ₹34.51 |
| மொத்த வட்டி கட்டணங்கள் | | | | ₹1395.08 |

ஆ) வட்டி கட்டணத்தின் மீதான GST 18% = ₹ 251.12

இ) செலுத்த வேண்டிய மொத்த நிலுவைத் தொகை = ₹ 8770

ஆக, டிசம்பர் 24 ஆம் தேதி கணக்கு அறிக்கையின் படி செலுத்தப்பட வேண்டிய மொத்த தவணைத் தொகை (a) + (b) + (c) = ₹ 10416.20

**விளக்கப்படம் 2**

தவணைத் தேதியில் குறைந்தபட்ச தவணைத் தொகையை முழுமையாக செலுத்திவிடும் பட்சத்தில் அதன் மீது விதிக்கப்படும் பல்வேறு கட்டணங்கள் கணக்கிடப்படும் முறை குறித்து பின்வரும் விளக்கப்படம் விளக்குகிறது. கார்ட் உறுப்பினர் முந்தைய அனைத்து நிலுவைத் தொகைகளையும் முழுமையாக செலுத்தி விட்டார் மற்றும் அவரது கார்ட் கணக்கில் வேறு எந்த ஒரு நிலுவைத் தொகையும் இல்லை என்று கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையின் தேதி நவம்பர் 24 மற்றும் தவணை செலுத்துத் தேதி டிசம்பர் 12 ஆக இருக்கிறது. கார்ட் கணக்கில் மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைகளின் பட்டியல் பின்வருமாறு:

| தேதி | பரிவர்த்தனை | தொகை | இருப்புத் தொகை |
|---|---|---|---|
| நவம்பர் 10 | ஆடை கொள்முதல் | ₹15000 | ₹15000 |
| நவம்பர் 15 | ஏ.டி.எம் -இல் பணம் வித்ட்ரா செய்தல் | ₹5000 | ₹20000 |
| நவம்பர் 15 | ரொக்க முன் தொகை கட்டணம் (வரிகள் உட்பட) | ₹295 | ₹20295 |
| நவம்பர் 18 | பலசரக்கு கொள்முதல் | ₹6000 | ₹26295 |
| நவம்பர் 24 | கணக்கு அறிக்கை நாள் | மொத்த நிலுவைத் தொகை<br>குறைந்தபட்ச தவணைத் தொகை | ₹26295<br>₹1595 |
| டிசம்பர் 12 | | தவணை நாள் | |
| டிசம்பர் 12 | கார்ட் கணக்கில் செலுத்தப்பட்ட தொகை | ₹1595 | ₹24700 |
| டிசம்பர் 18 | கார்ட் கணக்கில் செலுத்தப்பட்ட தொகை | ₹2000 | ₹22700 |
| டிசம்பர் 20 | மின் கட்டணம் செலுத்தப்பட்ட தொகை | ₹1000 | ₹23700 |
| டிசம்பர் 22 | கார்ட் கணக்கில் செலுத்தப்பட்ட தொகை | ₹18000 | ₹5700 |

டிசம்பர் 24 ஆம் தேதி வரை (அதாவது அடுத்த கணக்கு அறிக்கை நாள்) மேற்கொண்டு எந்த ஒரு தொகையும் செலுத்தப்படவில்லை. வருடத்திற்கு 36% என்ற தவணை தவறிய வட்டி விகிதத்தின் அடிப்படையில் கார்ட் மீதான வட்டி தொகை மற்றும் கட்டணங்கள் பின்வருமாறு விதிக்கப்படும்.

அ) வட்டி கட்டணங்கள்

| இருப்புத் தொகை | தொடக்க தேதி | முடிவு தேதி | மொத்த நாட்கள் | வட்டி கட்டணம் |
|---|---|---|---|---|
| ₹15000 | நவம்பர் 10 | நவம்பர் 14 | 5 | ₹73.97 |
| ₹20295 | நவம்பர் 15 | நவம்பர் 17 | 3 | ₹60.05 |
| ₹26295 | நவம்பர் 18 | டிசம்பர் 11 | 24 | ₹622.44 |
| ₹24700 | டிசம்பர் 12 | டிசம்பர் 17 | 6 | ₹146.17 |
| ₹22700 | டிசம்பர் 18 | டிசம்பர் 19 | 2 | ₹44.78 |
| ₹23700 | டிசம்பர் 20 | டிசம்பர் 21 | 2 | ₹46.75 |
| ₹5700 | டிசம்பர் 22 | டிசம்பர் 24 | 3 | ₹16.87 |
| மொத்த வட்டி கட்டணங்கள் | | | | ₹1011.02 |

ஆ) வட்டி கட்டணத்தின் மீதான GST 18% = ₹ 181.98

இ) செலுத்த வேண்டிய மொத்த நிலுவைத் தொகை = ₹ 5700

ஆக, டிசம்பர் 24 ஆம் தேதி கணக்கு அறிக்கையின் படி செலுத்தப்பட வேண்டிய மொத்த தவணைத் தொகை (a) + (b) + (c) = ₹ 6893

**விளக்கப்படம் 3**

தவணைத் தேதியில் குறைந்தபட்ச தவணைத் தொகையை முழுமையாக செலுத்திவிடும் பட்சத்தில் அதன் மீது விதிக்கப்படும் பல்வேறு கட்டணங்கள் கணக்கிடப்படும் முறை குறித்து பின்வரும் விளக்கப்படம் விளக்குகிறது. கார்ட் உறுப்பினர் முந்தைய அனைத்து நிலுவைத் தொகைகளையும் முழுமையாக செலுத்தி விட்டார் மற்றும் அவரது கார்ட் கணக்கில் வேறு எந்த ஒரு நிலுவைத் தொகையும் இல்லை என்று கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையின் தேதி நவம்பர் 24 மற்றும் தவணை செலுத்துத் தேதி டிசம்பர் 12 ஆக இருக்கிறது. கார்ட் கணக்கில் மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைகளின் பட்டியல் பின்வருமாறு:

| தேதி | பரிவர்த்தனை | தொகை | இருப்புத் தொகை |
|---|---|---|---|
| நவம்பர் 10 | ஆடை கொள்முதல் | ₹15000 | ₹15000 |
| நவம்பர் 15 | ஏ.டி.எம் -இல் பணம் வித்ட்ரா செய்தல் | ₹5000 | ₹20000 |
| நவம்பர் 15 | ரொக்க முன் தொகை கட்டணம் (வரிகள் உட்பட) | ₹295 | ₹20295 |
| நவம்பர் 18 | பலசரக்கு கொள்முதல் | ₹6000 | ₹26295 |
| நவம்பர் 24 | கணக்கு அறிக்கை நாள் | மொத்த நிலுவைத் தொகை<br>குறைந்தபட்ச தவணைத் தொகை | ₹26295<br>₹1595 |
| டிசம்பர் 12 | | தவணை நாள் | |
| டிசம்பர் 12 | கார்ட் கணக்கில் செலுத்தப்பட்ட தொகை | ₹26295 | |
| டிசம்பர் 20 | மின் கட்டணம் செலுத்தப்பட்ட தொகை | ₹1000 | ₹1000 |

டிசம்பர் 24 ஆம் தேதி வரை (அதாவது அடுத்த கணக்கு அறிக்கை நாள்) மேற்கொண்டு எந்த ஒரு தொகையும் செலுத்தப்படவில்லை. வருடத்திற்கு 36% என்ற தவணை தவறிய வட்டி விகிதத்தின் அடிப்படையில் கார்ட் மீதான வட்டி தொகை மற்றும் கட்டணங்கள் பின்வருமாறு விதிக்கப்படும்.

அ) வட்டி கட்டணங்கள் - இல்லை

ஆ) வட்டி கட்டணத்தின் மீதான GST - இல்லை

இ) செலுத்த வேண்டிய மொத்த நிலுவைத் தொகை = ₹ 1,000

ஆக, டிசம்பர் 24 ஆம் தேதி கணக்கு அறிக்கையின் படி செலுத்தப்பட வேண்டிய மொத்த தவணைத் தொகை (a) + (b) + (c) = ₹ 1,000

v. இதர கட்டணங்கள்:

அ) கடன் வரம்புக்கு மீறிய தொகைக்கான கட்டணங்கள்: கடன் வரம்புக்கு மீறிய தொகைக்கான ஒரு குறிப்பிட்ட பரிவர்த்தனையை கார்ட் உறுப்பினர் மேற்கொள்வதை ஒரு சேவை நோக்கத்தோடு வங்கி அனுமதிக்கக்கூடும். வரம்புக்கு மீறிய தொகையின் மீது குறைந்தபட்சம் ₹ 500 என்ற வரையறையோடு 2.5% விகித கட்டணம் விதிக்கப்படும். தவணைத் தொகைகள் அல்லது வட்டி கட்டணங்கள் காரணமாகவும் தொகை வரம்புக்கு மீறும் சந்தர்ப்பம் எழலாம்.

ஆ) அயல்நாட்டுப் பண மதிப்பில் கட்டணங்கள்: இந்திய ரூபாயைத் தவிர்த்து வேறு நாட்டு பண மதிப்பில் ஒரு பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டால் அந்த பரிவர்த்தனைத் தொகை இந்திய ரூபாய் மதிப்புக்கு மாற்றிக்கொள்ளப்படும். அந்த பரிமாற்றம் IDFC ஃபர்ஸ்ட் பேங்க் ஆல் நிறைவேற்றப்படும் நாளில் அந்த பண மதிப்பு மாற்றம் மேற்கொள்ளப்படும். அது அந்த பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்ட அதே நாளாக இருக்க வேண்டிய அவசியமில்லை. யு.எஸ் டாலர் மதிப்பில் அந்த பரிவர்த்தனை மேற்கொள்ளப்படவில்லை என்றாலும் யு.எஸ் டாலர் அடிப்படையிலேயே ரூபாய் மதிப்பு மாற்றம் மேற்கொள்ளப்படும். விதிக்கப்பட்ட கட்டணத்தொகையை யு.எஸ் டாலர் மதிப்புக்கு மாற்றப்பட்டு பிறகு இந்திய பணமதிப்புக்கு மாற்றப்படும். ஒரு குறிப்பிட்ட பண மாற்று விகிதம் பொருத்தமான சட்ட தேவைகளின் அடிப்படையில் தேவைப்பட்டாலேயன்றி யு.எஸ் டாலர் பணமதிப்பிலிருந்து இந்திய பணமதிப்புக்கு மாற்றும் விகிதம் விசா அல்லது மாஸ்டர் கார்ட் இவற்றில் எது பொருந்துமோ அது வழங்கும் பணமாற்று விகிதத்தின் படி அம்மாதிரியான பரிவர்த்தனைகளுக்கான கரன்சி கன்வர்ஷன் ஃபேக்டர் அசஸ்மெண்ட் அல்லது மார்க் அப் ஆகியவற்றின் அடிப்படையில் அதிகரித்து அமைந்து இருக்கும். கார்ட் வாரியான மார்க் அப் கட்டணங்கள் குறித்து அறிந்து கொள்ள கட்டண அட்டவணையைக் காணவும்.

இ) எரிபொருள் பரிமாற்ற உபரி கட்டணம் மற்றும் இரயில் பயண முன்பதிவுக்கான உபரி கட்டணம் (கட்டண அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளபடி) ஆகியவை ஒரு சுட்டிக்காட்டுதல் மட்டுமே. இந்த உபரி கட்டணங்கள் அதை வசூலிப்பவரால் (வர்த்தகரின் வங்கி வழங்கும் டெர்மினல் / பேமெண்ட் கேட்வே வசதி) விதிக்கப்படுகிறது.

ஈ) கணக்கு அறிக்கை, கார்ட் மாற்றித் தருதல், வெளிப்புற காசோலைகள், கிளைகள்/ ஏ.டி.எம் -இல் பணம் வித்ட்ரா செய்தல், திருப்பி அனுப்பப்பட்ட செலுத்துத் தொகைகள், EMI மாற்றியமைத்தல் ரொக்கத் தொகை செயலாக்கம், ரிவார்ட் ரிடம்ப்ஷன், இருப்புத் தொகை பரிமாற்றம், கடன் செயலாக்கம், முன்னதாக முடித்து வைத்தல், கார்ட் வேலிடேஷன், லௌஞ்ச், ஆட்-ஆன் கார்ட்கள் தொடர்பான பொருந்தத்தக்க கட்டணங்கள் கட்டண அட்டவணையில் கொடுக்கப்பட்டிருப்பதற்கு இணங்க செயல்படுத்தப்படும்.

உ) கார்ட் உறுப்பினருக்கு IDFC ஃபர்ஸ்ட் பேங்க் ஆல் வழங்கப்படும் குறிப்பிட்ட சேவைகளுக்கு அவ்வப்போது பொருத்தமான வகைகளில் செலுத்த வேண்டிய இதர கூடுதல் கட்டணங்கள் மற்றும் செலுத்துத் தொகைகள் கார்ட் உறுப்பினரால் செலுத்தப்பட வேண்டும்.

ஊ) வாடிக்கையாளருக்கு ஒரு முன்னறிவிப்பை அளித்து, எந்த ஒரு கட்டணங்கள் அல்லது செலுத்துத் தொகைகளில் அவ்வப்போது தான் சரி என்று கருதும் எந்த ஒரு மாற்றத்தையும் மேற்கொள்ள அல்லது புதிய கட்டணங்கள் அல்லது செலுத்துத் தொகைகளை விதிக்கும் உரிமையை IDFC ஃபர்ஸ்ட் பேங்க் தக்கவைத்துக் கொண்டுள்ளது

## 2. வரம்புகள்

கார்ட் உறுப்பினரின் கடன் மற்றும் ரொக்கத் தொகை பெறும் வரம்பை IDFC ஃபர்ஸ்ட் பேங்க் தனிப்பட்டு அதன் விருப்பத்திற்கிணங்க நிர்ணயிக்கும் (ஆட்-ஆன் கார்ட் உறுப்பினர்களும் அதே வரம்பை பகிர்ந்து கொள்வார்கள்) கடன் வரம்பு மற்றும் ரொக்கத் தொகை பெறும் வரம்பு ஆகியவை குறித்த தகவல் கார்ட் வழங்கப்படும் நேரத்தில் தெரிவிக்கப்படும் மற்றும் அவை மாதாந்திர கணக்கு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும். பயன்படுத்தப்பட்ட கடன் தொகையை மொத்த கடன் வரம்புத் தொகையிலிருந்து கழித்த பிறகு இருப்பில் இருக்கும் கடன் தொகை கணக்கிடப்படும். அதே சமயம் இருப்பில் இருக்கும் கடன் தொகை வரம்பை நிர்ணயம் செய்வதற்கு, செலுத்தப்படாமல் நிலுவையிலிருக்கும் கடன் தொகை மொத்த கடன் வரம்புத் தொகையில் இருந்து கழிக்கப்படும். ரொக்கத் தொகை வரம்பு என்பது கடன் தொகை வரம்பின் ஒரு உள்தொகை அல்லது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் ஆல் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் ஒரு தொகையாக இருக்கும். IDFC ஃபர்ஸ்ட் பேங்க் ஆல் நிர்ணயிக்கப்பட்ட கடன் தொகை வரம்பு மற்றும்/அல்லது ரொக்கத் தொகை வரம்பை மீளாய்வுக்குட்படுத்த/ அதிகரிக்க/ குறைக்க விண்ணப்பிக்கும் உரிமையை கார்ட் உறுப்பினர் தனது உறுப்பினர் தகுதிகாலமான 12 மாதங்கள் நிறைவு பெற்ற பின் பெறுவார். அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட மீளாய்வுக்குப் பிறகு கடன் வரம்பு மற்றும் /அல்லது ரொக்கத் தொகை வரம்பில் ஏதாவது திருத்தங்கள் இருக்குமானால், அது முழுமையாக IDFC ஃபர்ஸ்ட் பேங்க் -இன் சொந்த விருப்பத்தின் அடிப்படையிலேயே அமையும். கார்ட்க்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கடன் வரம்பு மற்றும் /அல்லது ரொக்கத் தொகை வரம்பை மீளாய்வுக்கு உட்படுத்துதல் (அதிகரித்தல் அல்லது குறைத்தல் உட்பட) போன்ற செயல்பாடுகளை எந்த நேரத்திலும் IDFC ஃபர்ஸ்ட் பேங்க் அதன் சொந்த விருப்பத்தின் பேரில் மேற்கொள்ளும் உரிமையைக் கொண்டுள்ளது. மற்றும் ஏதேனும், கடன் வரம்பு மற்றும்/அல்லது ரொக்கத் தொகை வரம்புகளில் ஏதாவது அதிகரிப்பு இருக்குமானால், அது கார்ட் உறுப்பினரின் ஒப்புதலோடு IDFC ஃபர்ஸ்ட் பேங்க் ஆல் அமல்படுத்தப்படும். கிரெடிட் கார்டை பயன்படுத்துவது அவ்வப்போது வழங்கப்பட்ட கடன் தொகை வரம்புகளை ஏற்றுக்கொண்டதாக பொருள்படும். ஃபர்ஸ்ட் பிரைவேட் கிரெடிட் கார்ட் மெம்பர்களுக்கு அவர்கள் வங்கிக்கு வெளிப்படுத்திய அவர்களின் தனிப்பட்ட மூலாதாரங்கள், கடந்த கால செலவு முறைகள் மற்றும் கடன் திரும்பச்செலுத்திய வரலாறு ஆகியவற்றின் அடிப்படையில் வங்கி அவர்களுக்கான கடன் வரம்பை கூடுதலாக அதிகரித்து அவ்வப்போது ஒதுக்கீடு செய்யலாம். அம்மாதிரியான அதிகரிப்பு வரையறுக்கப்பட்ட கடன் வரம்பிற்கு மேல் அதிகமான இடைநிலை இருப்புத் தொகையாக அல்லது வங்கி சரி என்று கருதும் வகையில் அவ்வப்போது நிர்ணயிக்கும் முறையில் இருக்கும்.

## 3. வட்டியில்லா சலுகை காலம்

வட்டியில்லா சலுகை காலம் 48 நாட்களுக்கு மிகாமல் இருக்கும் மேலும் பரிவர்த்தனை நாள் மற்றும் கணக்கு அறிக்கை நாள் அடிப்படையில் மாறுபட்டிருக்கும். சென்ற மாத அறிக்கையிலுள்ள இருப்புத் தொகை அதன் தவணை தேதியில் அல்லது அதற்கு முன்பாக முழுவதுமாக செலுத்தப்படவில்லை என்றால் வட்டியில்லா சலுகை காலம் பொருந்தாது என்பதைக் கருத்தில் கொள்ளுங்கள்.

வட்டியில்லா சலுகை கால கணக்கீடு குறித்து விளக்க ஒரு உதாரணம்:

2020 ஆம் ஆண்டு அக்டோபர் 25 ஆம் தேதி தொடங்கி 2020 ஆம் ஆண்டு நவம்பர் 24 ஆம் தேதி வரையிலான கணக்கு அறிக்கைக்கு தவணை செலுத்தும் தேதி 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 12 ஆம் தேதியாக இருக்கும். முந்தைய மாத அறிக்கையின்படி மொத்த தவணைத்தொகையையும் எந்த ஒரு நிலுவையும் இல்லாமல் முழுமையாக தவணை தேதியில் அல்லது அதற்கு முன்பாக செலுத்திவிட்டீர்கள் என்றால் அதற்கான சலுகை காலம் பின்வருமாறு இருக்கும்:

1. நவம்பர் 2 ஆம் தேதியிட்ட ஒரு கொள்முதலுக்கு வட்டியில்லா சலுகை காலம் நவம்பர் 2 ஆம் தேதியிலிருந்து டிசம்பர் 11 ஆம் தேதி வரை இருக்கும் அதாவது 40 நாட்கள்.
2. அக்டோபர் 25 ஆம் தேதியிட்ட ஒரு கொள்முதலுக்கு வட்டியில்லா சலுகை காலம் அக்டோபர் 25 ஆம் தேதியிலிருந்து டிசம்பர் 11 ஆம் தேதி வரை இருக்கும் அதாவது 48 நாட்கள்.

## 4. தவணை செலுத்தும் நாள் (PDD)

நிலுவைத் தொகைகள் திருப்பிச் செலுத்தப்பட்ட முந்தைய வரலாற்றின் அடிப்படையில் அறிக்கை தினத்திலிருந்து 15 முதல் 20 நாட்கள் வரை தவணை தொகை செலுத்தும் தேதிக்கான காலம் இருக்கலாம். இந்த சலுகை காலம் வங்கியின் முடிவிற்கும் மற்றும் மாறுதலுக்கும் உட்பட்டது. உதாரணமாக வட்டியில்லா சலுகை காலப் பிரிவில், கணக்கு அறிக்கை காலம் அக்டோபர் 25 -இலிருந்து நவம்பர் 24 வரையிலும் தவணை தேதி டிசம்பர் 12 ஆக குறிப்பிடப்பட்டு இருக்கிறது, இங்கு தவணை காலம் 18 நாட்களாக இருக்கிறது.

## 5. பில்லிங் மற்றும் அறிக்கை

i. அறிக்கை: கார்ட் உறுப்பினருக்கான பில் மாதாந்திர அடிப்படையில் உருவாக்கப்படும் மற்றும் அத்தோடு அந்த குறிப்பிட்ட மாதத்தில் ரூ. 100 -க்கும் அதிகமான பரிவர்த்தனைகளில் கார்ட் பயன்படுத்தப்பட்டிருக்கும் பட்சத்தில் செலுத்துத் தொகைகள், பரிவர்த்தனைகள் மற்றும் அந்த மாதத்தில் செலுத்த வேண்டிய ஏதாவது கட்டணங்கள் ஆகியவை அடங்கிய ஒரு அறிக்கை ஒவ்வொரு மாதமும் அனுப்பி வைக்கப்படும். வங்கியின் பதிவேடுகளில் உள்ள முகவரி / மின்னஞ்சல் முகவரி / தொலைபேசி எண் ஆகியவற்றின் அடிப்படையில் தபால்/ மின்னஞ்சல்/குறுஞ்செய்தி/ வாட்ஸ் ஆப் அல்லது வேறு எந்த ஒரு முறையிலும் அந்த அறிக்கை வங்கியால் அவ்வப்போது அனுப்பி வைக்கப்பட்டு தெரிவிக்கப்படும். மேலும் அறிக்கைகள் நெட் பேங்கிங்/மொபைல் பயன்பாடுகளிலும் கிடைக்கும். அறிக்கை பெறப்படாத காரணத்தால் இந்த ஒப்பந்தத்தின் கீழ் கார்ட் உறுப்பினருக்கு உள்ள கடப்பாடுகள் மற்றும் கடமைகள் எந்த வகையிலும் பாதிக்கப்படாது மற்றும் குறிப்பிட்ட தவணை நாட்களுக்குள் நிலுவைத் தொகைகளை செலுத்தும் கடமை கார்ட் உறுப்பினருக்கு உள்ளது. வர்த்தக நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து பற்று சீட்டுக்கள் மற்றும் அதன் விளைவாக எழுந்த கட்டணங்களுக்கான தொகையை கார்ட் கணக்கில் வங்கி பற்று வைத்துவிடும் மற்றும் கார்ட் உறுப்பினரால், வங்கிக்கு செலுத்தப்பட்ட அனைத்து தொகைகளையும் மற்றும் கார்ட் உறுப்பினருக்கு ஆதரவாக செலுத்தப்பட்ட எந்த ஒரு தொகையையும் வங்கி கார்ட் கணக்கில்

ii. செலுத்தப்பட வேண்டிய தொகைகள்: குறைந்தபட்ச செலுத்துத் தொகை (MAD) மற்றும் மொத்தம் செலுத்த வேண்டிய தொகை (TAD) மாதாந்திர அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும். கார்ட் உறுப்பினருக்கு ஒரு சுழற்சி முறையிலான கடன் வசதியை வங்கி வழங்கலாம் அந்த வசதியில் கார்ட் உறுப்பினர் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட குறைந்தபட்ச செலுத்துத் தொகையை (MAD) மட்டுமே செலுத்த தேர்ந்தெடுக்கலாம். தவணைத் தேதிக்குள் செலுத்தப்படும் மாதாந்திர தவணைத் தொகை குறைந்தபட்ச MAD அளவிலாவது இருக்க வேண்டும். முந்தைய அறிக்கைகளில் செலுத்தப்படாமலிருக்கும் எந்த MAD -யும் தற்போதைய MAD உடன் சேர்க்கப்பட்டு தற்போதைய அறிக்கையின் படி செலுத்தப்பட வேண்டிய MAD தொகை கணக்கிடப்படும். குறைந்தபட்ச தவணைத் தொகை செலுத்தப்பட்டிருந்தாலும், செலுத்தப்பட வேண்டிய தவணை தேதிக்குள் மொத்த தவணை தொகை செலுத்தப்படாமலிருந்தால் வட்டி விதிக்கப்படும். கார்ட் உறுப்பினர்கள் பில்லிங் கால கட்டத்தில் தவணை தேதிக்கு முன்பாகவே செலுத்த வேண்டிய குறைந்தபட்ச தொகையை விட அதிகமாக ஒரு முறைக்கு மேலாக பல முறை செலுத்தலாம் அல்லது தவணை தேதிக்கு முன்பாக கார்ட் கணக்கிலுள்ள நிலுவைத் தொகைகளை எந்த நேரத்திலும் செலுத்தலாம்.

MAD என்பது அனைத்து தவணைகளின் கூட்டுத் தொகையாகும், அதாவது கடன் வரம்புக்கு மீறிய பயன்பாடு (ஏதாவது இருந்தால்), செலுத்துத் தொகைகள், கட்டணங்கள் மற்றும் தவணை தவறிய நிலுவைத் தொகையில் 5% ஆகியவற்றின் கூட்டுத் தொகை. மொத்தத் தவணை தொகை (TAD) ₹100 -க்கும் குறைவாக இருந்தால், MAD ஆனது TAD -க்கு சரிசமமாக இருக்கும்.

ஒவ்வொரு மாதமும் குறைந்தபட்ச தவணை தொகையை மட்டுமே செலுத்தி வருவது மொத்த கடன் தொகையை திருப்பிச் செலுத்துவதற்கு சில ஆண்டுகள் எடுத்துக்கொள்வார்கள் மற்றும் அதன் விளைவாக அவர்களது நிலுவைத் தொகைகளின் மீதான வட்டி செலுத்துவதும் தொடரும் என்பதை கார்ட் உறுப்பினர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

விளக்கம்: கார்ட் உறுப்பினர் ₹ 5000 செலவு செய்கிறார் மற்றும் ஒவ்வொரு மாதமும் அதற்கு மிகச் சரியான குறைந்தபட்ச தவணை தொகையை மட்டுமே (குறைந்தபட்ச தொகையான ₹ 2100 -க்கு உட்பட்டு) செலுத்துகிறார் அப்படியென்றால் முழுத் தொகையும் செலுத்தி முடிக்க 3 வருடங்கள் மற்றும் 8 மாத காலம் ஆகும். ஆகவே, எப்போதெல்லாம் நிதி நிலை சரியாக இருக்கிறதோ அப்போதெல்லாம் குறைந்தபட்ச தவணை தொகையோடு சேர்த்து கணிசமான தொகையை கார்ட் நிலுவைத் தொகைக்கு எதிராக செலுத்த நாங்கள் அறிவுறுத்துகிறோம். ஒருவேளை, வாடிக்கையாளர் கார்ட் நிலுவைத் தொகைக்கும் கூடுதலான தொகை செலுத்தியிருப்பாரேயானால் அவரது கார்ட் கணக்கில் வரவு வைக்கப்பட்ட இருப்புத் தொகையாக அது காட்டப்பட்டு இருக்கும். இது தொடர்ந்து கார்ட் மூலமாக மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனைகளுக்கு எதிராக சரி செய்து கொள்ளப்படும். இருப்பினும் இந்த கூடுதல் இருப்புத் தொகையின் மீது எந்த ஒரு வட்டியும் கோர முடியாது. எந்த ஒரு தொகையும் செலுத்தப்பட்டு IDFC ஃபர்ஸ்ட் பேங்க் கிரெடிட் கார்ட் கணக்கில் வரவு வைக்கப்படாமல் இருந்தால் கார்ட் உரிமையாளர் அது தொடர்பாக அவரது வங்கியை 48 மணி நேரத்திற்குள் அணுக வேண்டும்.

## 6. தொகை செலுத்தல்கள்

கார்ட்க்கு எதிராக செலுத்தப்படும் தொகைகள் பின்வரும் பல்வேறு பிரிவுகளுக்கு எதிராக அதன் வரிசைப்படி சரிசெய்து கொள்ளப்படும்

i. வரிகள் உட்பட்ட செலுத்துத் தொகைகள் மற்றும் கட்டணங்கள்

ii. EMI

iii. வட்டி கட்டணங்கள்

iv. ரொக்க முன் தொகைகள்

v. கொள்முதல்கள்

vi. இதர பற்றுக் கணக்குகள்

செலுத்தப்பட்ட தொகைகளை வரவு வைப்பதில் பில் செய்யப்படாத நிலுவைத் தொகைகளுக்கும் மேலாக பில் செய்யப்பட்ட நிலுவைத் தொகைகளுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டு மேலே குறிப்பிட்ட வரிசைப்படியே மேற்கொள்ளப்படும். வர்த்தகர் திருப்பி வழங்கிய தொகை/ ரொக்கச்சலுகை/ பரிவர்த்தனைகளை EMI முறைக்கு மாற்றியதால் கிடைத்த வரவுத் தொகை / ரத்து செய்யப்பட்ட பரிவர்த்தனைகள்/ மீளமைத்தவை/ விளம்பர ரொக்கச்சலுகை ஆகியவை கார்டின் நிலுவைத் தொகைக்கு எதிராக செலுத்தப்பட்டவையாக கருதப்படாது.

## 7. தொகை செலுத்தல் முறைகள்

கார்ட் கணக்குக்கு எதிராக தொகை செலுத்துவதற்கு பின்வரும் எந்த ஒரு வழிமுறையையும் பின்பற்றலாம்.

i. நெட் பேங்கிங்: IDFC ஃபர்ஸ்ட் பேங்க் கணக்கு ஒன்றை கார்ட் உறுப்பினர் வைத்திருப்பாரேயானால், அவர் வலைத்தளம் அல்லது மொபைல் அப்ளிகேஷனை பயன்படுத்தி இணையத்தில் நெட் பேங்கிங் சேவை மூலமாக தொகையை செலுத்தலாம்.

ii. IMPS/NEFT: வாடிக்கையாளருக்கு IDFC ஃபர்ஸ்ட் பேங்க் கணக்கு இல்லை என்ற சந்தர்ப்பத்தில் அவர் சம்பந்தப்பட்ட வங்கிக் கணக்கு மூலமாக NEFT அல்லது IMPS தொகை செலுத்தும் முறைகளின் மூலமாக இணைய வழியில் தொகையை செலுத்தலாம்.

iii. காசோலை: காசோலையை IDFC ஃபர்ஸ்ட் பேங்க் கிளைகளில் வைக்கப்பட்டிருக்கும் டிராப் பாக்ஸ்களில் போடுவதன் மூலமாக கிரெடிட் கார்ட் நிலுவைத் தொகையை வாடிக்கையாளர் செலுத்தலாம். அம்மாதிரியான காசோலைகள்/ கேட்பு வரைவோலைகள் (டிமாண்ட் ட்ராப்ட்) IDFC ஃபர்ஸ்ட் பேங்க் கிரெடிட் கார்டின் 16 இலக்கங்கள் கொண்ட எண்ணுக்கு ஆதரவாக, அதாவது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் கார்ட் XXXXXXXXXXXXXXXX' செலுத்தும் வகையில் எடுத்து அளிக்கலாம்.

iv. ரொக்கத் தொகை செலுத்துதல்: கார்ட் உறுப்பினர் கிரெடிட் கார்ட் நிலுவைத் தொகைகளை ரொக்கத் தொகை மூலம் IDFC ஃபர்ஸ்ட் பேங்க் கிளைகளில் செலுத்தலாம்

v. நிலை அறிவுறுத்தல்கள்: கார்ட் உறுப்பினர் அவரது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் கணக்கிலிருந்து TAD அல்லது MAD தொகை செலுத்துவதற்கான நிலை அறிவுறுத்தலை அளிக்கலாம்.

vi. UPI QR: கார்ட் உறுப்பினர் QR கோடு அடிப்படையிலான, யூனிஃபைடு பேமெண்ட்ஸ் இன்டர்ஃபேஸ் (UPI) பேமெண்ட்டின் ஸ்கேன் டு பே முறையை பயன்படுத்தலாம்.

vii. UPI: UPI செயல்பாட்டைக் கொண்ட எந்த ஒரு ஆப் மூலமாகவும் வாடிக்கையாளர் தொகையை செலுத்தலாம்

viii. பேமெண்ட் கேட்வே: கார்ட்உறுப்பினர் பேமெண்ட் கேட் வே நிதி பரிமாற்றத்தின் மூலம் தொகையை செலுத்தலாம்

ix. தொகை செலுத்தும் வழிமுறைகள் புத்தாக்கம் செய்யப்பட்டதை வங்கியின் வலைத்தளத்தில் ஒரு அறிவிப்பின் மூலமாக வெளியிட்டு மேலே குறிப்பிட்ட எந்த ஒரு தொகை செலுத்தும் வழிமுறையையும் திருப்பப் பெறலாம் / இதர தொகை செலுத்தும் வழிமுறைகளை அறிமுகப்படுத்தலாம்.

## 8. பில்லிங் பிரச்சனைகள்

அறிக்கை அளிக்கப்பட்ட தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் மற்றும் அம்மாதிரியான பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்ட தினத்திலிருந்து 60 நாட்களுக்கு மிகாத காலத்தில் அறிக்கையில் காணப்படும் ஏதாவது முரண்பாடுகள் குறித்து எழுத்து மூலமாக IDFC ஃபர்ஸ்ட் பேங்கிற்குத் தெரிவிக்கப்படவில்லை என்றால் அறிக்கையிலுள்ள அனைத்து உள்ளடக்கங்களும் சரியானவை மற்றும் கார்ட் உறுப்பினரால், ஏற்றுக்கொள்ளப்பட்டவை என்று கருதப்படும். பில்லிங் பிரச்சனைகள்/முரண்பாடுகள் போன்ற சந்தர்ப்பங்களில் அம்மாதிரியான பரிவர்த்தனைகள் குறித்து வங்கி விசாரணை மேற்கொண்டு அதற்கான கடப்பாடுகளை உறுதி செய்யும். சில முரண்பாடுகளில், வங்கி அதன் தனிப்பட்ட விருப்பத்திற்கிணங்க அந்த விசாரணை காலத்தில் தற்காலிகமாக தொகை ஒன்றை வரவு வைத்து வழங்கலாம் மற்றும் விசாரணை முடிவுக்கு ஏற்ப அதற்குப் பொருத்தமான கட்டணங்கள் (கட்டணங்கள் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி) உட்பட அந்தத் தொகை திரும்பப் பெறப்படலாம். எந்த ஒரு முரண்பாட்டிலும் செலுத்துத் தொகை மற்றும் கட்டணங்கள் / வட்டித் தொகை தொடர்பானவற்றில் விதிக்கப்பட்ட GST தொகையை திரும்பப்பெற முடியாது.

## 9. தொடர்பு தகவல்கள்:

கார்ட் உறுப்பினர் பின்வரும் எந்த ஒரு வழியிலும் IDFC ஃபர்ஸ்ட் பேங்கைத் தொடர்பு கொள்ளலாம்:

i. 24X7 மணி நேர உதவி எண் - 1860 500 1111 -இல் அழைக்கவும்

ii. IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட்
கிரெடிட் கார்ட் அல்லைட் சர்வீஸஸ் டிவிசன்
4வது தளம், யூனிட் எண் 402, பிளாட் எண் Gen/2/1/F,
மைண்ட்ஸ்பேஸ் டவர், TTC இண்டஸ்ட்ரியல் ஏரியா
MIDC ஷிர்வானே, ஜூய் நகர் நவி மும்பை, ராய்காட்,
மகாராஷ்டிரா, 400706
என்ற முகவரிக்கு எங்களுக்கு தபால் அனுப்புங்கள்

iii. banker@idfcfirstbank.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்

iv. Queries மூலம் எங்களைத் தொடர்பு கொள்ளவும் மற்றும் நெட்பேங்கிங்/மொபைல் பயன்பாடு மூலம் எங்களைத் தொடர்பு கொள்ளவும்

## 10. குறைதீர்ப்பு நடைமுறை

அணுகல் வழிமுறைகள் மூலமாக பெறப்பட்ட பதில்கள் உங்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை என்றால், பின்வரும் முறைகளில் தலைவர்/சீனியர் கஸ்டமர் கேர் ஆகியோரைத் தொடர்பு கொண்டு உங்கள் குறைகள் குறித்து மேல்முறையீடு செய்யலாம். நீங்கள் head.custommerserviceidfcfirstbank.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்பலாம் அல்லது 1800 209 9771 என்ற (கட்டணமில்லா) எண்ணில் காலை 9:30 மணியிலிருந்து மாலை 6:00 மணி வரை வாரத்தில் 7 நாட்களிலும் வங்கியை அழைக்கலாம்.

மேலும் மேல் இடத்தில் புகார் அளிக்க வேண்டுமென்றால் எங்களது பிரின்சிபல் நோடால் அதிகாரியை (Ms டி அரோரா, IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட், கட்டிட எண் 2, ரஹேஜா மைண்ட்ஸ்பேஸ், MIDC இண்டஸ்ட்ரியல் பகுதி, ஷிரவனே, ஜூய்நகர், நெருல், நவி மும்பை - 400706, மகாராஷ்டிரா, இந்தியா, லாண்ட்மார்க்: ரஹேஜா யுனிவர்சல் அல்லது ஹோண்டா சேவை மையம்) தொடர்பு கொண்டு பிரச்சனைகளை ஆராய்ந்து பாகுபாடு இல்லாத தீர்வுகளை பெறலாம், மேலும் மேல் இடத்தில் புகார் அளிக்க நீங்கள் PNO@idfcfirstbank.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் ஒன்றை அனுப்பலாம் அல்லது 1800 209 9771 என்ற (கட்டணமில்லா) எண்ணில் காலை 9:30 மணியிலிருந்து மாலை 6:00 மணி வரை வாரத்தில் 7 நாட்களிலும் அழைக்கலாம்.

உங்கள் குறைகள் குறித்து பதிலைப் பெற்ற 30 நாட்களுக்குள் மேல் இடத்தில் புகார் அளிக்கலாம் மற்றும் உங்கள் சேவை வேண்டுகோள் எண்ணை குறிப்பிடுங்கள்.

மேலே குறிப்பிட்ட வழிமுறைகளில் புகார் சமர்ப்பிக்கப்பட்ட நாளில் இருந்து ஒரு மாதத்திற்குள் எந்த ஒரு பதிலையும் கார்ட் உறுப்பினர் பெறவில்லை என்றால் அல்லது கொடுக்கப்பட்ட பதிலில் கார்ட் உறுப்பினருக்கு திருப்தி இல்லை என்றால், அவர் பேங்கிங் ஆம்புட்ஸ்மேனுக்கு ஒரு தனிப்பட்ட மறு ஆய்வுக்கு எழுத்துமூலமாக விண்ணப்பிக்கலாம். www.idfcfirstbank.com என்ற குறைதீர்ப்பு நடைமுறை வலைத்தளத்தில் மேலும் அதிக தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. உங்கள் அமைவிடத்திற்கான பேங்கிங் ஆம்புட்ஸ்மேன் குறித்த தகவல்கள் வங்கி கிளைகளிலும் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

வெற்றிபெறாத /தோல்வியுற்ற பரிவர்த்தனைகள் தொடர்பாக குறைதீர்ப்பு நடவடிக்கையில் ஏற்படும் தாமதம் மற்றும் கணக்கை முடித்து வைப்பது / தொலைந்து /திருடு போன கார்ட்களை முடக்குவதில் தாமதம் ஆகியவற்றுக்கான இழப்பீட்டு கட்டமைப்பு IDFC ஃபர்ஸ்ட் பேங்க் வலைத்தளத்தில் வெளியிடப்பட்டிருக்கும் அது வாடிக்கையாளர் இழப்பீடு கொள்கைகள் மற்றும் குறைதீர்க்கும் கொள்கைகளில் வரையறுக்கப்பட்டதற்கு இணக்கமாக இருக்கும்.

## 11. பற்றுரிமை தகுதி (ரைட் ஆஃப் லீன்)

i. வங்கியால் கோரப்பட்ட அல்லது வேறு வகையில் வங்கியின் எந்த ஒரு கணக்கு/ வசதி/ காப்பில் உள்ள எந்த ஒரு நிலுவைத் தொகைக்கும் எதிராக கார்ட் கணக்கு அல்லது வேறு எந்த ஒரு கடன் வசதிக்கும் எதிராக குறிப்பிட்ட தவணை கால அளவிற்குள் நிலுவைத் தொகையை செலுத்தவில்லை என்றால். கார்ட் உறுப்பினர் மற்றும்/அல்லது ஆட்-ஆன் கார்ட் உறுப்பினர் / IDFC ஃபர்ஸ்ட் பேங்க் வாடிக்கையாளர் ஆகியோரின் பெயரில் உள்ள வங்கியின் எந்த ஒரு கணக்கு/ வசதி/ காப்பில் உள்ள வைப்புத் தொகைகளின் அனைத்து ரொக்கத் தொகை மீதும் வங்கி எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் எந்த ஒரு அறிவிப்பையும் அளிக்காமல் பற்றுரிமை மற்றும் எதிரீடு செய்து கொள்ளும் உரிமையை கொண்டுள்ளது.

ii. முடித்து வைக்கப்படும் போது மீட்டெடுப்பதற்கு இருக்கக் கூடிய மீதமுள்ள ரிவார்ட் பாயிண்டுகள் ஒரு பரிமாற்றத்தை மேற்கொள்வதற்கு தேவைப்படும் பாயிண்ட்டுகளுக்கும் குறைவாக இருக்கும் பட்சத்தில் அதை நிறைவேற்ற தேவையான வேறுபாட்டுத் தொகையை வாடிக்கையாளர் கார்ட் / கணக்கிலிருந்து பற்று வைத்துக்கொள்ளும் உரிமையை வங்கி தக்கவைத்துக் கொண்டுள்ளது.

## 12. தவணை செலுத்த தவறுதல்

கார்ட் உறுப்பினர் பில்லிங் அறிக்கையில் குறிப்பிட்ட தினத்திற்குள் குறைந்தபட்ச தவணை தொகையை செலுத்தத் தவறினால், அது தவறிய தவணையாக கருதப்படும். கட்டணங்கள் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளதன்படி, தாமத தண்டத்தொகை, நிதிக் கட்டணங்கள் மற்றும் இதர பொருத்தமான கட்டணங்களை வாடிக்கையாளர் செலுத்த வேண்டும். இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) அங்கீகாரம் பெற்ற கிரெடிட் தகவல்கள் நிறுவனங்களுக்கு (CICs) சமர்ப்பிக்கப்படும் மாதாந்திர அறிக்கையில் அந்த கார்ட் கடமை தவறிய ஒன்றாக குறிப்பிடப்படும். பில்லிங் அறிக்கையில் குறிப்பிட்ட பில்லிங் தேதி மற்றும் தவணை தொகை செலுத்துவதற்கான குறிப்பிட்ட தேதி ஆகியவற்றுக்கிடையே உள்ள கால அளவு கார்ட் உறுப்பினரை ஒரு கடமை தவறியவராக அறிக்கை அளிக்க தேவையான முன் அறிவிப்பு காலமாக கருதப்படும் கிரெடிட் கார்ட் வசதிகளை கட்டுப்படுத்தும் விதிகள் மற்றும் நிபந்தனைகள் ஆட்-ஆன் கார்ட் உறுப்பினர்களுக்கும் பொருந்தும். தவணை தவறும் சந்தர்ப்பத்தில் கார்ட் கணக்கில் உள்ள எந்த ஒரு நிலுவைத் தொகையையும் செலுத்த அறிவுறுத்தி தபால், நகலஞ்சல், தொலைபேசி, மின்னஞ்சல், குறுஞ்செய்தி, மற்றும்/அல்லது நினைவூட்ட மூன்றாம் தரப்பினரை நியமிக்கும் செயல்பாடுகள் மூலமாக கார்ட் உறுப்பினருக்கு நினைவூட்டல் அறிக்கை அனுப்பப்பட்டு தொடர்ந்து கண்காணிப்பை மேற்கொண்டு நிலுவைத் தொகைகள் வசூலிக்கப்படும். அம்மாதிரி நியமிக்கப்படும் எந்த ஒரு மூன்றாம் தரப்பினரும் கடன் வசூலிக்கும் நடத்தை நெறிமுறைகளுக்கு முழுமையாக இணங்கி நடக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மூலமாக நியமிக்கப்படும் வங்கியின் வாடிக்கையாளர் சேவை உதவி நிபுணர்கள் நிலுவைத் தொகை குறித்து

நினைவூட்ட கார்ட் உறுப்பினர்களை தொடர்பு கொள்வார்கள். வங்கியினால், கார்ட் உறுப்பினரை தொடர்பு கொள்ள இயலாவிட்டால், துணை/ பெற்றோர்/ இதர நேரடியான மூத்த குடும்ப உறுப்பினர்/உறவினர்/ செயலாளர்/ கணக்காளர்/ உடன் பணிபுரிபவர் / இல்லத்தில் இருக்கக் கூடிய கார்ட் உறுப்பினருக்கு அறிமுகமான வயது வந்த இதர நபர் போன்ற மூன்றாம் தரப்பினரிடம் வீடு /அலுவலகம்/ தொலைபேசியில் செய்தி வழங்கப்படும்.

கார்ட் உறுப்பினர் தவணை செலுத்தத் தவறிய ஒரு நிகழ்வில் வங்கி அதன் தனிப்பட்ட விருப்பத்தின் கீழ் பின்வருபவற்றை மேற்கொள்ளும் உரிமையைக் கொண்டுள்ளது:

அ) கார்ட் உறுப்பினருக்கு வழங்கப்பட்ட கிரெடிட் கார்டின் அனைத்து வசதிகளையும் திரும்பப் பெறுதல்.

ஆ) கார்ட் உறுப்பினரை அவரது கார்டில் உள்ள அனைத்து நிலுவைத் தொகைகளையும் உடனடியாக செலுத்தச் சொல்லுதல்.

இ) எந்த ஒரு நிலுவைத் தொகைக்கும் எதிராக வங்கியில் கார்ட் உறுப்பினரின் பெயரில் பராமரித்து வரப்படும் எந்த ஒரு பணம் /வைப்புத் தொகைகள்/கணக்குகள் ஆகியவற்றில் தனக்குள்ள பற்றுரிமை மற்றும் எதிரீட்டு உரிமையை வங்கி செயல்படுத்தும்.

தவணை செலுத்த தவறிய அறிக்கையை திரும்பப் பெறுவதற்கான நடைமுறை மற்றும் நிலுவைத் தொகை செலுத்தப்பட்ட பிறகு தவணை தவறிய அறிக்கையை திரும்பப்பெறுவதற்கான கால அவகாசம்

ஒரு கார்ட் உறுப்பினரின் இறப்பு அல்லது நிரந்தர ஊனம் போன்ற சந்தர்ப்பங்களில் ,எந்த ஒரு பொருத்தமான கார்ட் காப்பீடு நிலுவைத் தொகை அல்லது கார்ட் உறுப்பினரின் வாரிசுகள் / நிறைவேற்றுநர்கள்/ நிர்வாகிகளிடையேயிருந்து மீட்டெடுப்பது உட்பட எந்த ஒரு கார்ட் கணக்கு(களின்) நிலுவைத் தொகைகளை மீட்டெடுக்கவும் சட்டம் மற்றும் சமபங்குகளின் கீழ் தனக்குள்ள அனைத்து வழிமுறைகளையும் அதன் விருப்பத்தின் படி பின்பற்றி நடக்கும் உரிமையை வங்கி தக்கவைத்துக் கொண்டுள்ளது.

வங்கியின் செயலக அறிவிப்பு மாதாந்திர அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. தவணை தவறியவராக ஒரு குறிப்பிட்ட மாதத்தில் அறிவிப்பு அளிக்கப்பட்ட பிறகு முடித்து வைக்கப்பட்ட எந்த ஒரு நிலுவைத் தொகையின் புதுப்பித்தல் நிலை வங்கியினால் சமர்ப்பிக்கப்படும் அடுத்த அறிக்கையில் அந்த புதிப்பிக்கப்பட்ட நிலை குறிப்பிடப்பட்டிருக்கும்.

## 13. கார்ட் உறுப்பினர் தகுதி நீக்கம்/ திரும்பப்பெறுதல்/ மாற்றித் தருதல்

i. ஒரு கார்ட் உறுப்பினர், வங்கிக்கு bankeridfcfirstbank.com என்ற முகவரிக்கு எழுத்து மூலமாக தெரிவித்து அல்லது 1860 500 1111 என்ற உதவி எண்ணுக்கு அழைப்பு விடுத்து எந்த ஒரு நேரத்திலும் தனது கார்ட் உறுப்பினர் தகுதியை விலக்கிக் கொள்ளலாம். தவறான பயன்பாட்டை தவிர்க்க, கார்டிலுள்ள ஹோலோகிராம், EMV சிப் மற்றும் காந்தப் பட்டி ஆகியவை நிரந்தரமாக அழிக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் அதை துண்டு துண்டாக வெட்டிவிட வேண்டும். கார்டில் நிலுவையிலுள்ள ஒட்டு மொத்த தொகை மற்றும் கிரெடிட் கார்ட் உடன் இணைக்கப்பட்ட (அவ்வாறு இருக்கும் பட்சத்தில்) கடன்கள் /EMI வசதிகள் ஆகியவை உடனடியாக திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகையாக மாறிவிடும். அந்த குறிப்பிட்ட கார்ட் கணக்கு தொடர்பாக நிலுவையிலுள்ள செலுத்தப்பட வேண்டிய அனைத்து நிலுவைத் தொகைகளையும் IDFC ஃபர்ஸ்ட் பேங்க் பெற்ற பிறகே கார்ட் நிறுத்தி வைப்பது செயல்பாட்டுக்கு வரும். கார்ட் உறுப்பினருக்கு மேற்கொள்ளப்பட்ட வருடாந்திர, சேர்க்கை, புதுப்பித்தல் கட்டணங்கள் அல்லது வேறு எந்த ஒரு பில் செய்யப்பட்ட கட்டணங்களும் திருப்பித்தரப்பட மாட்டாது.

ii. கார்ட் பயன்பாட்டில் எந்த ஒரு வழக்கத்துக்கு மாறான மற்றும் வழக்கத்துக்குப் புறம்பான பரிவர்த்தனை நடைமுறைகளை IDFC ஃபர்ஸ்ட் பேங்க் காண நேர்ந்தால், அந்த கார்ட் பரிமாற்றம் உண்மையானதுதானா என்பதை சரிபார்த்து அறிந்துகொள்ள வங்கி தனது பதிவேடுகளில் உள்ள வடிக்கையாளரின் பதிவு செய்யப்பட்ட தொலைபேசி எண்ணில் வாடிக்கையாளரை தொடர்பு கொள்ள முயற்சிகளை மேற்கொள்ளும். வாடிக்கையாளரை தொடர்பு கொள்வதில் வங்கி தோல்வியடைந்தால், கார்ட் உறுப்பினரின் நலனை மற்றும் பாதுகாப்பு காரணங்களை கருத்தில் கொண்டு வங்கி தேவை என்று நியாயமாக நம்புவதன் அடிப்படையில் மேற்கொண்டு எந்த ஒரு அறிவிப்பையும் அளிக்காமல் வங்கி அந்த கார்டின் பயன்பாட்டை கட்டுப்படுத்தும்/நீக்கிவிடும்.

iii. தொகை செலுத்தல்களில் தாமதம், கடன் வரம்பை மீறிய பயன்பாடு, காசோலை திரும்புதல், கிரெடிட் கார்டின் முறையற்ற பயன்பாடு (அன்னியச்செலாவணி வர்த்தகம் வணிக பயன்பாடு போன்ற இன்னும் பல) மற்றும் கார்ட் விண்ணப்பத்தோடு சேர்த்து அல்லது வேறு வழிகளில் திசை திருப்பும் அல்லது தவறான தகவல்கள்/ஆவணங்களை அளித்தல், பொருத்தமான சட்டங்கள் / ஒழுங்குமுறைகளுக்கு தேவைப்படும் உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள் (KYC) பண மோசடி தடுப்பு நடவடிக்கைகள் (AML) / நிதி பயங்கரவாதத்துக்கு எதிரான வழிகாட்டுதல்கள் (CFT) போன்ற வங்கி/ RBI -க்கு தேவைப்படும் (அடையாள ஆவணங்கள் உட்பட) தகவல்கள் அல்லது ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறியது, எந்த ஒரு உரிமையியல் வழக்கு அல்லது குற்றச்செயல்/ எந்த ஒரு அதிகாரி, சட்டப்பூர்வமான நீதிமன்றங்கள் அல்லது தொழில்முறை அமைப்பு அல்லது சங்கத்தினாலும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையில் கார்ட் உறுப்பினர் சம்பந்தப்பட்ட செயல் ஆகியவை உட்பட ஆனால் அது மட்டுமே இல்லாமல் இன்னும் பல தொடர்பாக வணிகம் அல்லது பாதுகாப்பு காரணங்களுக்குத் தேவை என்று IDFC ஃபர்ஸ்ட் பேங்க் கருதும் பட்சத்தில் எந்த ஒரு முன்னறிவிப்பும் இன்றி கார்டின் பயன்பாட்டை நிறுத்தவும் செய்யலாம்.

iv. கிரெடிட் கார்ட் பயன்பாடு ஒழுங்குமுறை ஆணையத்தின் வழிகாட்டுதல்கள், விதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் பொருந்தக்கூடிய IDFC ஃபர்ஸ்ட் பேங்க் கொள்கைகளின் படி இருப்பதை உறுதி செய்யும் நோக்கத்தோடு, ஒரு அறிக்கை சுழற்சியின் போது ஒப்புதலளிக்கப்பட்ட கடன் வரம்புக்கு மீறிய அளவில் கடன் வரம்பின் பயன்பாடு இருக்கிறதா, சில குறிப்பிட்ட வர்த்தகர்களுடனான பயன்பாடு வழக்கத்துக்குப் புறம்பாக அல்லது அதிகளவில் இருக்கிறதா, வர்த்தகர்களுடனான கூட்டு மற்றும்/ அல்லது தனிநபர் சாராத / வணிகம் தொடர்பான தேவைகளுக்கான பயன்பாடு,

வர்த்தகர்களுடனான கூட்டு மற்றும்/ அல்லது தனிநபர் சாராத / வணிகம் தொடர்பான தேவைகளுக்கான பயன்பாடு, மற்றவற்றுக்கு இடையில் முறையற்ற வழிகளில் ரிவார்ட் பாயிண்ட்டுகள்/ ரொக்க சலுகை/ இதர பயன்களை அடையும் நோக்கத்துடன் அதிகளவு/தவறான பயன்பாடு போன்றவற்றை அடையாளம் காணும் பொருட்டு கிரெடிட் கார்ட் பயன்பாட்டை முறையாக ஒரு குறிப்பிட்ட இடைவெளிகளில் சரி பார்க்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது. பயன்பாட்டு நடவடிக்கைகளின் அடிப்படையில் இங்கு குறிப்பிட்ட வகையில் ஏதாவது ஒரு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக வங்கி சந்தேகப்பட்டால், கிரெடிட் கார்டை கட்டுப்படுத்தும் நடவடிக்கையை வங்கி மேற்கொள்ளும் அம்மாதிரியான நடவடிக்கைகள் உடனடியாக அமலுக்கு வரும் மற்றும் அதில் கிரெடிட் கார்டில் வழங்கப்பட்ட அம்சங்கள் / பலன்கள் திரும்பபெறுவது அத்துடன் கூடுதலாக அதை ஒட்டுமொத்தமாக நிறுத்துவது உட்பட ஆனால் அது மட்டுமே இல்லாது மற்றவையும் சேர்த்த நடவடிக்கைகளாக இருக்கும். வங்கியால் அம்மாதிரியான எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டால் கிரெடிட் கார்டை மற்றும் வங்கி பொருத்தம் என்று கருதும் இதர இணைக்கப்பட்ட அம்சங்கள் /பலன்களை மீண்டும் திரும்பப் பெறுவதற்கு அதன் நம்பகமான பயன்பாட்டை நிரூபிக்கும் வகையில் திருப்திகரமான ஆதாரங்களை வழங்கும் பொறுப்பு வாடிக்கையாளரையே சாரும். இது தொடர்பாக IDFC ஃபர்ஸ்ட் பேங்க்கின் முடிவே இறுதியானதும் மற்றும் வாடிக்கையாளர்களைக் கட்டுப்படுத்துவதும் ஆகும்.

v. கார்ட் உறுப்பினரின் மரணம் அல்லது ஊனமடைதல் போன்ற நிகழ்வுகளின் போது அவருக்கு வழங்கப்பட்ட மற்றும் வேறு எந்த ஒரு ஆட்-ஆன் கார்ட் உறுப்பினர்களின் கிரெடிட் கார்ட்களும் தானாகவே ரத்து செய்யப்பட்டுவிடும் மற்றும் எந்த ஒரு அரசு / ஒழுங்குமுறை ஆணையத்தின் அறிவுறுத்தல்களின் படி கிரடிட் கார்ட் கணக்கும் இடைநிறுத்தம் செய்யப்படுவதற்கு உள்ளாகும் கிரெடிட் கார்ட் கணக்கில் உள்ள அனைத்து பற்று தொகைகளும் கார்ட் உறுப்பினரின் மரணம் அல்லது ஊனமடைதல் இதில் எது பொருந்துமோ அந்த சந்தர்ப்பத்தில் உடனடியாக செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகையாக மாறிவிடும், கார்ட் நிலுவைத் தொகைகளை எந்த ஒரு பொருத்தமான காப்பீட்டு வழங்கல்களில் இருந்து அல்லது கார்ட் உறுப்பினரின் வாரிசுகள் / நிறைவேற்றுநர்கள்/ நிர்வாகிகளிடமிருந்து மீட்டெடுப்பது உட்பட எந்த ஒரு கார்ட் கணக்கு(களின்) நிலுவைத் தொகைகளை மீட்டெடுக்கவும் சட்டம் மற்றும் சமபங்குகளின் கீழ் தனக்குள்ள அனைத்து வழிமுறைகளையும் அதன் விருப்பத்தின் படி பின்பற்றி நடக்கும் உரிமையை IDFC ஃபர்ஸ்ட் பேங்க் தக்கவைத்துக் கொண்டுள்ளது

vi. கார்ட் உறுப்பினர்(களின்) கிரெடிட் கார்ட் பயன்படுத்தப்படாமலேயே இருந்தால் அல்லது 365 நாட்களுக்கும் மேலாக பயன்படுத்தப்படாமல் இருந்தால், அது தொடர்பாக வழங்கப்பட்ட அனைத்து பலன்களும் திரும்பப் பெறப்படும் மற்றும் அந்த கார்ட் முடித்து வைக்கப்படலாம் இருப்பினும் கார்ட் உறுப்பினர் தகுதியை தொடர கேட்டு 30 நாட்களுக்குள் வெளிப்படையான ஒப்புதல் அளித்த விண்ணப்பம் பெறப்பட்டால் அது தவிர்க்கப்படும். அம்மாதிரியான திரும்பப் பெறுதல் நடவடிக்கை குறித்து கார்ட் உறுப்பினருக்கு(களுக்கு) முன் அறிவிப்பு அளிக்கப்படும்.

vii. கார்ட் தகுதி நீக்கம்/ ரத்து/மீளமைத்தல் போன்ற எந்த ஒரு சந்தர்ப்பங்களிலும் கார்ட் தொடர்பான நிலுவைத் தொகைகள் மற்றும் கடன்கள்/ கார்ட் உடன் இணைக்கப்பட்ட EMI வசதிகள் அனைத்தும் முழுமையாக செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகைகளாக கருதப்படும். ஒப்பந்தத்தின் கீழ் IDFC ஃபர்ஸ்ட் பேங்க்கிற்கு செலுத்தப்பட வேண்டிய கணக்கில் இன்னும் பற்று வைக்கப்படாத, அனைத்து பரிவர்த்தனைகள் மற்றும் இதர தொகைகள் உட்பட அனைத்து தொகைகளும் நிலுவைத் தொகைகளில் உள்ளடங்கும். கணக்கு முடித்து வைக்கப்பட்ட பிறகும், கார்ட் உறுப்பினர் அசல் நிலுவைத் தொகைகளை பிரதிபலிக்கும் தகவல்கள் அடங்கிய மாதாந்திர அறிக்கைகளை தொடர்ந்து பெறுவார்.

viii. எம்ப்ளாயீ கிரெடிட் கார்ட் வழங்கல் / முடித்து வைப்பு ஆகியவை மேலே குறிப்பிட்டவையோடு சேர்த்து எம்ப்ளாயீஸ் கிரெடிட் கார்டில் வழங்கப்பட்ட அம்சங்கள் மற்றும் வங்கியின் இணைய தள போர்ட்டலில் கொடுக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் நிர்வகிக்கப்படும்.

## 14. கார்ட் இழப்பு/திருட்டு/ முறை கேடான பயன்பாடு

i. கார்ட் ஒருவேளை தொலைந்து விட்டால், திருடப்பட்டுவிட்டால், தவறுதலாக எங்காவது விட்டுவிடப்பட்டால், சேதமடைந்துவிட்டால், சரியான நேரத்தில் பெறப்படாவிட்டால், கார்ட் உறுப்பினர் தனது ஒப்புதல் இல்லாமல் கிரெடிட் கார்ட் பயன்படுத்தப்படுகிறது அல்லது அதன் PIN குறியீடு அல்லது இதர பாதுகாப்பு தகவல்கள் வேறு எவருக்கோ தெரிந்திருக்கிறது என்று சந்தேகப்பட்டால் அந்த சந்தர்ப்பங்களில் கார்ட் உறுப்பினர் உடனடியாக வங்கியின் 24 மணிநேர பயன்பாட்டில் இருக்கும் அழைப்பு எண் 1860 500 1111 -இல் IDFC ஃபர்ஸ்ட் பேங்க்கை தொடர்பு கொள்ள வேண்டும். உள்ளூர் காவல் நிலையத்தில் FIR (முதல் தகவல் அறிக்கை) ஒன்றை தாக்கல் செய்ய கார்ட் உறுப்பினருக்கு அறிவுறுத்தப்படுகிறது, அப்போதுதான் வங்கி கோரும்போது அதன் ஒரு நகலை கார்ட் உறுப்பினரால் சமர்ப்பிக்க முடியும்.
புகார் அளிப்பதில் ஏதாவது தாமதம் இருக்குமானால், இதற்கான கடப்பாடு வங்கியின் வலைத்தளத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் வாடிக்கையாளர் காப்பீட்டுக் கொள்கைகளில் அடங்கியுள்ளவற்றுக்கு இணங்க தீர்மானிக்கப்படும்.

ii. கார்ட் தொலைந்து போனது குறித்து புகார் அளிப்பதற்கு முன்பான காலத்தில் மேற்கொள்ளப்பட்ட எந்த ஒரு பரிவர்த்தனை தொடர்பாகவும் IDFC ஃபர்ஸ்ட் பேங்கிற்கு எந்த ஒரு கடப்பாடு அல்லது பொறுப்பு இல்லை. அதற்கான முழுப்பொறுப்பும் கார்ட் உறுப்பினரையே சாரும். அந்த இழப்பு குறித்த ஒரு முறையான அறிவிப்பை IDFC ஃபர்ஸ்ட் பேங்க் பெற்றதிலிருந்து எதிர்காலத்தில் அந்த கார்ட் கணக்கில் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு பரிவர்த்தனைகளுக்கும் கார்ட் உறுப்பினர் கடப்பாடு கொண்டவராக மாட்டார்.

iii. கார்ட் உறுப்பினர் அல்லது ஆட்-ஆன் கார்ட் உறுப்பினரின் ஒப்புதலோடு கார்டை அல்லது PIN குறியீட்டை பெற்ற யாராவது ஒருவர் மேற்கொள்ளும் எந்த ஒரு பரிவர்த்தனைகளால் விளையும் அனைத்து இழப்புகளுக்கும் கார்ட் உறுப்பினரே

பொறுப்பாவார். கார்ட் உறுப்பினர் மோசடி செய்யும் எண்ணத்தோடு செயல்பட்டிருந்தால், அனைத்து இழப்புகளுக்கும் கார்ட் உறுப்பினரே பொறுப்பாவார். கார்ட் உறுப்பினர் ஒரு நியாயமான ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் கவனத்தை மேற்கொள்ளவில்லை என்றால், அதனால் விளையும் அனைத்து இழப்புக்களுக்கும் கார்ட் உறுப்பினரே பொறுப்பேற்க வேண்டும்.

iv. வாடிக்கையாளரால் செலுத்தப்பட வேண்டிய நிலுவையிலுள்ள எந்த ஒரு கட்டணமும் வர்த்தகர் /உறுப்பினர் வங்கியால் வசூலிக்கப்படும் சந்தர்ப்பத்தில், அதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டாலும் தெரிவிக்கப்படாவிட்டாலும், வாடிக்கையாளருக்கு பொருந்தும் வகையில் வங்கியின் பில்லிங் சுழற்சிக்கு இணங்க அந்த தொகைகளை செலுத்த கார்ட் உறுப்பினர் கடமைப்பட்டவராவார். அதற்கும் கூடுதலாக, IDFC ஃபர்ஸ்ட் பேங்க் தொகை செலுத்தியிருக்கும் பட்சத்தில் அந்த குறிப்பிட்ட தொகையை வாடிக்கையாளரிடமிருந்து வசூலிக்கும் உரிமை வங்கிக்கு உள்ளது. மேலும் அந்தத் தொகை குறித்து முரண்பாடு இருந்தால் அந்த முரண்பாட்டிற்கு தீர்வு/முடிவு கிடைக்கும் வரை காத்திருக்காமல் பில்லிங் சுழற்சிக்கு இணங்க அந்த தொகைகளை கார்ட் உறுப்பினர் உடனடியாக செலுத்த வேண்டும். எந்த ஒரு காரணத்திற்காகவும் எந்த வகையிலும் வங்கியுடனான வாடிக்கையாளரின் தொடர்பு விட்டுப்போயிருந்தாலும் மற்றும் / அல்லது கார்ட் இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தாலும் IDFC ஃபர்ஸ்ட் பேங்கிற்கு தொகையை வசூலிப்பதற்கான குறிப்பிட்ட அந்த உரிமை மற்றும் தொகையை செலுத்த வாடிக்கையாளருக்குள்ள கடமை ஆகியவை செல்லத்தக்கதாக நிலைத்திருக்கும்.

v. கிரெடிட் கார்ட் பயன்பாட்டிற்காக கார்ட் உறுப்பினருக்கு வழங்கப்பட்ட PIN (தனிநபர் அடையாள எண்) அல்லது கார்ட் உறுப்பினரால் PIN ஆக தேர்ந்தெடுக்கப்பட்ட வேறு எந்த ஒரு எண்ணும் கார்ட் உறுப்பினருக்கு மட்டுமே தெரிந்ததாக இருக்க வேண்டும். அது கார்ட் உறுப்பினரின் தனிப்பட்ட பயன்பாட்டிற்கானது மேலும் அது மாற்றத்தக்கதல்ல மற்றும் கண்டிப்பாக இரகசியமானது. எழுத்து மூலமாக பதிவு செய்யப்பட்ட PIN தகவல்கள் வேறு ஒரு மூன்றாம் தரப்பினர் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் எந்த ஒரு வடிவிலும் இடத்திலும் அல்லது வகையிலும் அதன் வசதிகளை வைத்திருக்கக் கூடாது. IDFC ஃபர்ஸ்ட் பேங்க் அல்லது வணிக நிறுவனங்களின் பணியாளர்கள் போன்ற எந்த ஒரு மூன்றாம் தரப்பினருக்கும் தன்னிச்சையாகவோ அல்லது வேறு எந்த ஒரு வாக்கியிலும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அல்லது எந்த வகையிலும் PIN வெளியிடப்படக் கூடாது, PIN தொடர்பாக கார்ட் உறுப்பினர் மேற்கொள்ளும் எந்த ஒரு சமரசத்திற்கும் IDFC ஃபர்ஸ்ட் பேங்க் மற்றும்/அல்லது அதன் அலுவலர்கள்/ பணியாளர்கள் பொறுப்பேற்கவோ அல்லது கடப்பாடு கொண்டவர்களாகவோ இருக்க மாட்டார்கள்.

vi. கார்ட் கணக்கு சமரச ஆபத்திற்கு உள்ளாகிறது என்ற சந்தேகம் ஏற்பட்டால் கார்ட் உறுப்பினரின் நலனை பாதுகாப்பதற்கும் மற்றும் கார்ட் கணக்கு எந்த ஒரு வகையிலும் தவறாக பயன்படுத்தப்படுத்தப்படுவதை தவிர்ப்பதற்கும் கிரெடிட் கார்டை முடக்குவதற்கான உரிமையை IDFC ஃபர்ஸ்ட் பேங்க் தக்கவைத்துக் கொண்டுள்ளது. கார்ட் அல்லது PIN -இன் இழப்பு, திருட்டு அல்லது தவறான பயன்பாடு குறித்து தனக்கு சரி மற்றும் பொருத்தமானது என்று கருதும் எந்த ஒரு தகவலையும் IDFC ஃபர்ஸ்ட் பேங்க் ஆனது கார்ட் உறுப்பினருக்கு அல்லது வேறு எந்த ஒரு ஆட்-ஆன் கார்ட் உறுப்பினருக்கும் தெரிவிக்காமல் காவல் துறையினர் அல்லது பொருத்தமான இதர அதிகாரிகளுக்கு அளிக்கலாம்.

vii. கார்ட் தொலைந்து விட்டதாக அறிவிக்கப்பட்டபிறகு அந்த கார்ட் திரும்பக் கிடைக்கும் பட்சத்தில் அதை எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கார்ட் உறுப்பினர் பயன்படுத்தக் கூடாது. கார்ட் கண்டறியப்பட்டால், கார்டிலுள்ள ஹோலோகிராம், EMV சிப் மற்றும் காந்தப் பட்டி ஆகியவை நிரந்தரமாக அழிக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் அதை துண்டு துண்டாக வெட்டிவிடுங்கள். ஆட்-ஆன் கார்ட் அடிப்படை கார்ட் கணக்கின் ஒரு நீட்சியாக வழங்கப்படுவதால், அடிப்படை கார்ட் தொலைந்து விட்டதாக புகார் அளிக்கப்பட்டவுடன் ஆட்-ஆன் கார்ட் முடக்கப்பட்டுவிடும். அதேபோன்று ஆட்-ஆன் கார்ட் தொலைந்துவிட்டதாக புகார் அளிக்கப்பட்டால் அடிப்படை கார்ட் கணக்கு மற்றும் இதர ஆட்-ஆன் கார்ட்களும் செல்லத்தக்காதவையாக முடக்கப்பட்டுவிடும்.

## 15. மறை வெளியீடு

i. RBI ஆல் அங்கீகரிக்கப்பட்ட கிரெடிட் இன்ஃபர்மேஷன் நிறுவனங்களுடன் (CICs) IDFC ஃபர்ஸ்ட் பேங்க் கூட்டு வைத்துள்ளது மற்றும் இந்த நிறுவனங்களுக்கு தற்போதைய இருப்புத்தொகை கடன்/ கிரெடிட் கார்ட் உடன் இணைக்கப்பட்ட EMI வசதிகள் (அவை பயன்படுத்தப்பட்டிருந்தால்) கிரெடிட் கார்டின் நிலுவை தவணை தொகைகள், /கடன், தொகை திருப்பிச் செலுத்திய வரலாறு போன்ற இன்னும் பல தகவல்களை மக்கள் தொகையியல் புள்ளிவிவர தகவல்களோடு சேர்த்து கிரெடிட் இன்ஃபர்மேஷன் நிறுவனங்கள் (ஒழுங்குமுறை) சட்டம் 2005 -இன் படி, மாதாந்திர அடிப்படையில் வழங்கும். CICs உண்மையான கிரெடிட் தகவல்களை மட்டுமே வழங்குகின்றன மற்றும் கடன் வழங்கப்படலாமா அல்லது வேண்டாமா என்பது குறித்து வேறு எந்த ஒரு கருத்தையும், சுட்டிக்காட்டுதலையும் அல்லது விருப்பங்களையும் தெரிவிப்பதில்லை. கார்ட் உறுப்பினர் தன் சொந்த நலன்களைக் கருத்தில் கொண்டு அத்தியாவசியமான நிலுவைத் தொகைகளை குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் செலுத்தி ஒரு நல்ல கடன் நடத்தைக்கான வரலாற்றை பராமரிக்க வேண்டும். CICs -களிடம் தவணை தவறிய தகவல்களும் இருக்கும் அது கார்ட் உறுப்பினர்களின் கடன் பெறும் தகுதியை பாதிக்கும்.

ii. கார்ட் உறுப்பினர் வங்கியுடன் பில்லிங் தொடர்பான தாவாவை எழுப்பியிருந்தாலும் அதற்கு முன்பாக வங்கி அதை ஒரு செல்லத்தகாத தாவாவாக அல்லது வங்கியால் வரையறுக்கப்பட்ட தேதிக்குப் பிறகு வாடிக்கையாளரால் அந்த தாவா எழுப்பப்படுகிறது மற்றும்/அல்லது அந்த தாவா PIN அல்லது ஒரு முறை பயன்பாட்டு கடவுச்சொல் போன்றவை பயன்படுத்தப்பட்ட பாதுகாக்கப்பட்ட பரிவர்த்தனை என்பதை விளக்கியிருந்த அந்த நிலையிலும் கடமை தவறிய வாடிக்கையாளர் குறித்து CICs -க்கு அறிவிக்கும் உரிமையை IDFC ஃபர்ஸ்ட் பேங்க் தக்கவைத்துக் கொண்டுள்ளது.

iii. சட்டப்பூர்வமான அதிகாரிகளின் தேவைக்கு இணங்க கார்ட் கணக்கு விவரங்களை IDFC ஃபர்ஸ்ட் பேங்க் வழங்கும். கார்ட் உறுப்பினர் IDFC ஃபர்ஸ்ட் பேங்க் மற்றும் அதன் கூட்டாளர் வழங்கும் இணை பிராண்ட் கார்டைப் பெற்றிருந்தால், ரிவார்ட் ப்ரோக்ராம்கள், உடைமைப் பட்டியல் புள்ளிவிவர பகுப்பாய்வுகள் போன்ற இன்னும் பலவற்றை செயல்படுத்த தேவையான தகவல்கள் உட்பட ஆனால் அது மட்டுமே இல்லாமல் மற்றவற்றையும் சேர்த்து எந்த ஒரு வரம்புமில்லாமல் இணை பிராண்டு கூட்டாளருக்கு வழங்கும்.

iv. கார்ட் உறுப்பினர் மற்றும் வங்கியின் பிரதிநிதி ஆகியோருக்கிடையே நடைபெறும் குறைதீர்ப்பு நடவடிக்கை தொடர்பான உரையாடல் அல்லது செலுத்துத் தொகை மீட்டெடுப்பது தொடர்பான உரையாடல்கள் அல்லது வங்கி முறையென்று கருதும் வேறு எந்த ஒரு குறிப்பிட்ட உரையாடல்களையும் IDFC ஃபர்ஸ்ட் பேங்க் அதன் தனிப்பட்ட விருப்பத்தின் படி ஒலிப்பதிவு செய்யும் என்பதையும் கார்ட் உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்ள நாங்கள் விரும்புகிறோம்.

v. பொருத்தமான ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களுக்கு இணங்க தனது சொந்த விருப்பத்தின் கீழ் இந்தியாவில் அல்லது வெளிநாட்டில் அமைந்துள்ள IDFC ஃபர்ஸ்ட் பேங்க் மூலம் நியமிக்கப்பட்ட எந்த ஒரு சேவை வழங்குநருக்கும் அது ஒரு IDFC ஃபர்ஸ்ட் பேங்க் நிறுவனமாக இருந்தாலும் அல்லது ஒரு மூன்றாம் தரப்பினராக இருந்தாலும் கிரெடிட் கார்ட் இயக்கம் தொடர்பான எந்த ஒரு நடவடிக்கையையும் அதன் சார்பாக ஒதுக்கீடு செய்யும் உரிமையை IDFC ஃபர்ஸ்ட் பேங்க் தக்கவைத்துக் கொண்டுள்ளது.

உறுப்பினர்/ ஆட்-ஆன் கார்ட் உறுப்பினர் கணக்கு / விண்ணப்பங்களின் விவரங்களை கிரெடிட் கார்ட் செயல்பாடுகள் தொடர்பான எந்த ஒரு நடவடிக்கைகளுக்கும் எந்த ஒரு குறிப்பிட்ட ஒப்புதல் இல்லாமல் அம்மாதிரியான சேவை வழங்குநர்களுக்கு IDFC ஃபர்ஸ்ட் பேங்க் கார்ட் வழங்கலாம்/ பகிரலாம். புகைப்படங்கள் உட்பட இதன் கீழ் வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் மற்றும் ஆவணங்கள் அனைத்தையும் திருப்பித்தராமல் தக்கவைத்துக்கொள்ளும் உரிமையை IDFC ஃபர்ஸ்ட் பேங்க் / குழும நிறுவனங்கள் தக்கவைத்துக்கொண்டுள்ளன.

vi. IDFC ஃபர்ஸ்ட் பேங்க் அதன் கார்ட் உறுப்பினர்களுக்கு குறிப்பிடத்தக்க நன்மைகளை வழங்கக் கூடிய, பல்வேறு திட்டங்கள் /சிறப்பம்சங்கள்/ விளம்பர சலுகைகளை அவ்வப்போது அறிவித்து வருகிறது மற்றும் அவ்வாறு செய்ய மூன்றாம் தரப்பு நிறுவனங்களின் சேவைகளை அது பயன்படுத்தலாம். IDFC ஃபர்ஸ்ட் பேங்க் -இல் இருந்து நேரடி சந்தைப்படுத்தல், குறுஞ்செய்திகள், மின்னஞ்சல்கள் அல்லது தொலைபேசி அழைப்புகள் போன்ற அம்மாதிரியான எந்த ஒரு சேவையையும் பெற கார்ட் உறுப்பினர் விரும்பவில்லை என்றால் கார்ட் உறுப்பினர் 24 மணி நேர உதவி அழைப்பு எண்ணிலிருந்து அழைத்து வங்கிக்குத் தெரிவிக்கலாம். மாற்றாக, கார்ட் உறுப்பினர் வங்கியின் இணையதளத்தில் புகு பதிகை செய்து 'தொந்தரவு செய்ய வேண்டாம்' என்பதற்கு பதிவு செய்யலாம். கார்ட் உறுப்பினர் கிரெடிட் கார்டின் அடிப்படை அம்சங்கள். தொடர்பான தகவல்கலைத் தொடர்ந்து பெறுவார்.

vii. செலக்ட் கிரெடிட் கார்ட் வகை கார்டில் ஒரு இலவச காப்பீட்டுத் திட்டம் வழங்கப்பட்டிருக்கலாம். கிரெடிட் கார்ட் செட் அப் செய்யும் நாளில் இருந்து காப்பீடு கவரேஜ் தொடங்கும். மேலும் அதிக தகவல் மற்றும் விதி மற்றும் நிபந்தனைகள் குறித்து அறிய, IDFC ஃபர்ஸ்ட் பேங்க் வலைத்தளத்தைப் பார்க்கவும்.

## 16. FEMA அன்னியச்செலாவணி மேலாண்மை சட்டம் (ஃபாரின் எக்ஸ்சேஞ்ச் மேனேஜ்மெண்ட் ஆக்ட்) உட்பட இதர முக்கியமான தகவல்கள்

i. இந்த கிரெடிட் கார்ட் இந்தியா மற்றும் அயல்நாடுகள் இரண்டிலும் பயன்படுத்த செல்லத்தக்கது இருப்பினும் இது நேபாளம் மற்றும் பூட்டான் நாடுகளில் அன்னியச்செலாவணி தொகை செலுத்தல்களுக்கு செல்லத்தக்கதல்ல.

ii. லாட்டரி டிக்கட்டுகள், தடை செய்யப்பட்ட அல்லது விலக்கப் பட்ட பத்திரிக்கைகள், குதிரைப் பந்தய சூதாட்டத்தில் பங்குபெறுதல், கால் பேக் சேவைகளுக்கு பணம் செலுத்துதல் போன்ற தடை செய்யப்பட நடவடிக்கைகளுக்கு, இன்டர்நேஷனல் கிரெடிட் கார்ட்களை பயன்படுத்த முடியாது மற்றும் /அல்லது அம்மாதிரியான தயாரிப்புகள் /நடவடிக்கைகளுக்கு அந்நிய செலாவணியை பயன்படுத்துவது அனுமதிக்கப்படாது.

iii. இந்த கார்டை இந்தியாவுக்கு வெளியே அயல்நாட்டில் பயன்படுத்தும் போது எக்ஸ்சேஞ்ச் கண்ட்ரோல் ரெகுலேஷன் ஆப் RBI மற்றும் அன்னியச்செலாவணி மேலாண்மை சட்டம் 1999 (ஃபாரின் எக்ஸ்சேஞ்ச் மேனேஜ்மெண்ட் ஆக்ட்) ஆகியவை உட்பட பொருத்தமான சட்டங்களுக்கு இணங்க பயன்படுத்த வேண்டும். அம்மாதிரி செய்யத் தவறும் பட்சத்தில், கார்ட் உறுப்பினர் தண்டனைக்குரிய நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

iv. பன்னாட்டு வர்த்தக போர்டல்கள் மூலமாக அன்னியச்செலாவணி வர்த்தகம் மேற்கொள்வது அனுமதிக்கப்படாது. இதற்கு இணங்காத அல்லது மீறிய எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கார்ட் உறுப்பினர் தண்டனைக்குரிய நடவடிக்கைகளுக்கு ஆளாக நேரிடும் மற்றும் /அல்லது கார்ட் முடக்கப்படும்.

v. NRI வாடிக்கையாளர்களுக்கு பணம் செலுத்தல்கள் 100 % IDFC ஃபர்ஸ்ட் பேங்க் NRE/NRO கணக்குகளில் இருந்து ஆட்டோ பே மோட் மூலமாக மட்டுமே அனுப்ப வேண்டும். NRI வாடிக்கையாளர்களுக்கு ரொக்கத் தொகை செலுத்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.

vi. இதில் கண்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் /அல்லது கார்ட் பயன்பாட்டின் மூலமாக எழும் எந்த ஒரு பிரச்சனைகள் தொடர்பான எந்த ஒரு தாவாவும் எந்த ஒரு அதிகார எல்லை வரம்பும் இல்லாது இந்தியாவின் மும்பையிலுள்ள நீதிமன்றங்களில் விசாரிக்கப்படும் மற்றும் இந்திய சட்டங்களால் நிர்வகிக்கப்பட்டு அதற்கிணங்க பொருள் கொள்ளப்படும் என்பதற்கு தரப்பினர்கள் ஒப்புக் கொள்கிறார்கள்.

ஆர்பிட்ரேஷன் அண்ட் கன்சிலியேஷன் ஆக்ட் 1996 அது திருத்தப்படும் அல்லது அது மீண்டும் இயற்றப்படும் வகையில்

அதற்கு இணங்க வங்கியால் நியமிக்கப்பட்ட ஒரு தனி இசைவுத் தீர்ப்பாளருக்கு வங்கி அதன் சொந்த விருப்பத்தின் பேரில் தாவாவை அனுப்பி வைக்கலாம் மற்றும் இசைவுத் தீர்வு நடவடிக்கைகள் ஆங்கில மொழியில் நடைபெறும். இசைவுத் தீர்ப்பாளர் வழங்கும் தீர்வே இறுதியானது மற்றும் இரண்டு தரப்பினரையும் கட்டுப்படுத்தும். இசைவுத் தீர்ப்பாளர் மன்ற நடவடிக்கைகள் டெல்லி/மும்பை/சென்னை/ கொல்கத்தா மற்றும்/அல்லது வங்கியின் தனிப்பட்ட விருப்பத்தின் படி அறிவிக்கப்பட்ட அம்மாதிரியான ஒரு இடத்தில் நடைபெறும் அல்லது இசைவுத் தீர்ப்பாளர் மன்ற நடவடிக்கைகள் காணொளிக் கலந்தாய்வு மூலமாகவும் நடத்தப்படும். தீர்ப்பாயத்தால் உத்தரவிடப்பட்ட எந்த ஒரு விசாரணையிலும் பங்குபெற பின்வருபவை பொருந்தும்:

அ) அம்மாதிரியான எந்த ஒரு விசாரணையும் தீர்ப்பாயத்தின் உத்தரவின் படி காணொளி கலந்தாய்வு மூலம் நடத்தப்படும்

ஆ) அம்மாதிரியான எந்த ஒரு விசாரணையையும் தொடர்ந்து தீர்ப்பாயத்தால் வழங்கப்படும் முடிவு, உத்தரவு அல்லது இழப்பீடு குறித்து அந்த விசாரணை காணொளி கலந்தாய்வின் அடிப்படையிலானது என்ற காரணத்தைக் குறிப்பிட்டு அதை மறுக்கக் கூடாது என்பதற்கு இருதரப்பினரும் ஒப்புக்கொள்கிறார்கள்.

vii. எந்த ஒரு கடன் வசதிக்கு எதிராகவும் எந்த ஒரு தொகையும் வங்கிக்கு செலுத்தப்பட வேண்டியது நிலுவையில் இருப்பது எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கண்டறியப்பட்டால், அந்த மாதிரியான எந்த ஒரு / அனைத்து வசதிகளுக்கும் எதிராக தடையில்லாச் சான்றை (NOC) எந்த ஒரு முன்னறிவிப்புமின்றி பயன்படுத்துவதற்கான முழு உரிமையை வங்கி கொண்டுள்ளது என்பதை கார்ட் உறுப்பினர் ஒப்புக்கொள்கிறார்.

viii. முன்கூட்டியே கணிக்கக்கூடிய அல்லது கணிக்க முடியாத பலருக்கு அல்லது எந்த ஒரு நபருக்கும் ஏற்பட்ட எந்த ஒரு வருவாய் இலாபம், வணிகம், ஒப்பந்தங்கள், எதிர்பார்க்கப்பட்ட சேமிப்புகள் அல்லது நல்லெண்ணங்களின் இழப்பு, மென்பொருள் உட்பட எந்த ஒரு சாதனத்தின் பயன்பாடு அல்லது மதிப்பு இழப்பு, வேண்டுகோளை ஏற்று மற்றும் நடைமுறைப்படுத்த மற்றும் முறைப்படுத்தி எதிர்வினையை திரும்ப அனுப்புவதில் வங்கியின் தீர்மானம் அல்லது தவறு மூலமாக அல்லது அது தொடர்பாக எந்த வகையிலும் எழுந்த தாமதம், குறுக்கீடு, இடைநிறுத்தம்அல்லது எந்த ஒரு தகவல் அல்லது செய்தியை பயனரின் கருவிக்கு அல்லது எந்த ஒரு பிணைய சேவை வழங்குநருக்கு மற்றும் வங்கியின் அமைப்புக்கு அனுப்புவதில் அல்லது பெறுவதில் ஏதேனும் தோல்வி, தாமதம், குறுக்கீடு, இடைநிறுத்தம், கட்டுப்பாடு அல்லது பயனரின் தொலைத் தொடர்பு சாதனங்கள், வங்கியின் அமைப்பு அல்லது எந்த ஒரு இணைய சேவை வழங்குனர் மற்றும் / அல்லது அம்மாதிரியான தேவைப்படும் வசதிகளின் ஒரு சேவைகளை வழங்கும் எந்த ஒரு மூன்றாம் தரப்பினரின் அமைப்பில் எந்த ஒரு பழுது குறுக்கீடு, இடைநிறுத்தம், அல்லது தோல்வி காரணமாக எழுந்த எந்த ஒரு இழப்பு அல்லது சேதாரம் உட்பட ஆனால் அது மட்டுமே இல்லாமல் மற்றவையும் சேர்த்து நேரடியாக, மறைமுகமாக அல்லது விளைவாக அதற்கான மற்றும் அது தொடர்பான எந்த ஒரு கடப்பாடும் IDFC ஃபர்ஸ்ட் பேங்க், அதன் பணியாளர்கள் மற்றும் முகவர்களுக்கு இல்லை.

ix. IDFC ஃபர்ஸ்ட் பேங்க் ஆனது பேங்கிங் கோட்ஸ் 6 ஸ்டாண்டர்ட் போர்ட் ஆஃப் இந்தியா (BCSBI) -இல் ஒரு உறுப்பினர். BCSBI கோட்பாடுகள் பற்றிய விவரங்கள் எங்களது இணைய தளத்தில் உள்ளது.